KALANILAYAM

தனிப்பிரதி ரூ. 0 3 0

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 8 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

Vol 5] 1932 ௵ மார்ச்சு ௴ 3௳ [No. 9

## பொருளடக்கம்.


1. தலையங்கம் (Leader) 161
2. குன்றுடையானும் மக்களும்
W.V. கோவிந்தசாமி ராஜு BA.,LT. 163
3. மானத சாத்திரம் (குறிப்பு)
T. P. மீனாக்ஷிசுந்தரம் M. A. B. L. 165
4. தினகர வெண்பா
S. வையாபுரிப்பிள்ளை B A. B.L. 167
5. தமிழ்ப்பாடம்
நளவெண்பா - சுயம்வரகாண்டம் 168
6. அப்பர் (64 கலை—தர்க்கம்)
E. N தணிகாசல முதலியார் B.A. B.L. 171
7. ஜூலியஸ் ஸீஸர் (அங்கம் 2. களம் 1.)
ஷேக்ஸ்பியர் நாடகம் 174
8. கம்பராமாயணம் (அகத்தியப் படலம்)
T. N. சேஷாசலம் B.A. B.L. 176
9. வர்த்தமானம் 179


## கலாநிலயம்

### விதியோ வித்தகமோ.

விதிக்கும் மதிக்கும் இடையே பயில்கின்ற விளையாட்டு மிக அதிகம். வினையிலும் வினையாய இதனை விளையாட்டென்று பேசுவதோ எனச் சிலர் அயிர்ப்பார். இன்பத்திற்கியன்றதல்லாததைப் புன்விதியென்றும், இன்பம் பயப்பதற் காதாரமாயிருப்பதை நல்விதி என்றும் அழைப்பது வழக்கு. இன்பமுந்துன்பமும் எனின் விதிபால் வருவதோ மதிபால் பெறுவதோ என்னுஞ் சிந்தனை, சிந்திக்கவல்லோரெல்லோரையும் சிற்சில போதேனுஞ் சோதித்திருக்கவேண்டும். இதனையே பொருளாகக்கொண்டு ஆராய்ந்த வித்தகர்களினத்தில் மிகச் சிறந்த மேனாட்டறிஞர் மாரிஸ் மாட்டர்லிங்க் (Maurice Maeterlinck) என்பவர், பின்வருமாறு உரைக்கின்றார்:—

To-day misery is the disease of mankind, as disease is the misery of man. And even as there are physicians for disease, so should there be physicians for human misery. But can the fact that disease is, unhappily, only too prevalent, render it wrong for us ever to speak of health? which were indeed as though, in anatomy—the physical science that has most in common with morals—the teacher confined himself exclusively to the study of the deformities that greater or lesser degeneration will induce in the organs of man. We have surely the right to demand that his theories be based on the healthy and vigorous body; as we have also the right to demand that the moralist, who fain would see beyond the present hour, should take as his standard the soul that is happy, or that at least possesses every element of happiness, save only the necessary consciousness.

We live in the bosom of great injustice; but there can be, I imagine, neither cruelty nor callousness in our speaking, at times, as though this injustice had ended, else should we never emerge from our circle.

It is imperative that there should be some who dare speak, and think, and act as though all men were happy; for otherwise, when the day comes for destiny to throw open to all the people's garden of the promised land, what happiness shall the others find there, what justice, what beauty or love? It may be urged, it is true, that it were best, first of all, to consider the most pressing needs, yet is this not always wisest; it is often of better avail from the start to seek that which is highest. When the waters beleaguer the home of the peasant in Holland, the sea or the neighbouring river having swept down the dyke that protected the country, most pressing is it then for the peasant to safeguard his cattle, his grain, his effects; but wisest to fly to the top of the dyke, summoning those who live with him, and from thence meet the flood, and do battle. Humanity up to this day has been like an invalid tossing and turning on his couch in search of repose; but therefore none the less have words of true consolation come only from those who spoke as though man were freed from all pain. For, as man was created for health, so was mankind created for happiness; and to speak of its misery only, though that misery be everywhere and seem everlasting, is only to say words that fall lightly and soon are forgotten. Why not speak as though mankind were always on the eve of great certitude, of great joy? Thither, in truth, is man led by his instinct, though he never may live to behold the long-wished-

for to-morrow. It is well to believe that there needs but a little more thought, a little more courage, more love, more devotion to life, a little more eagerness, one day to fling open wide the portals of joy and of truth. And this thing may still come to pass. Let us hope that one day all mankind will be happy and wise; and though this day never should dawn, to have hoped for it cannot be wrong. And in any event, it is helpful to speak of happiness to those who are sad, that thus at least they may learn what it is that happiness means. They are ever inclined to regard it as something beyond them, extraordinary, out of their reach. But if all who may count themselves happy were to tell, very simply what it was that brought happiness to them, the others would see that between sorrow and joy the difference is but as between a gladsome, enlightened acceptance of life and a hostile, gloomy submission; between a large and harmonious conception of life, and one that is stubborn and narrow. "Is that all?" the unhappy would cry. "But we too have within us, then, the elements of this happiness." Surely you have them within you! There lives not a man but has them, those only excepted upon whom great physical calamity has fallen. But speak not lightly of this happiness. There is no other. He is the happiest man who best understands his happiness; for he is of all men most fully aware that it is only the lofty idea, the untiring, courageous, human idea, that separates gladness from sorrow. Of this idea it is helpful to speak, and as often as may be; not with the view of imposing our own idea upon others, but in order that they who may listen shall, little by little, conceive the desire to posses an idea of their own. For in no two men is it the same. The one that you cherish may well bring no comfort to me; nor shall all your eloquence touch the hidden springs of my life. Needs must I acquire my own, in myself, by myself; but you unconsciously make this the easier for me, by telling of the idea that is yours. It may happen that I shall find solace in that which brings sorrow to you, and that which to you speaks of gladness may be fraught with affliction for me. But no matter; into my grief will enter all that you saw of beauty and comfort, and into my joy there will pass all that was great in your sadness, if indeed my joy be on the same plane as your sadness. It behoves us, the first thing of all, to prepare in our soul a place of some loftiness, where this idea may be lodged; as the priests of ancient religions laid the mountain peak bare, and cleared it of thorn and of root for the fire to descend from heaven. There may come to us any day, from the depths of the planet Mars, the infallible formula of happiness, conveyed in the final truth as to the aim and the government of the universe. Such a formula could only bring change or advancement unto our spiritual life in the degree of the desire and expectation of advancement in which we might long have been living. The formula would be the same for all men, yet would each one benefit only in the proportion of the eagerness, purity, unselfishness, knowledge, that he had stored up in his soul. All morality, all study of justice and happiness, should truly be no more than preparation, provision on the vastest scale—a way of gaining experience, a stepping-stone laid down for what is to follow. Surely, desirable day of all days were the one when at last we should live in absolute truth, in immovable logical certitude; but in the meantime it is given us to live in a truth more important still, the truth of our soul and our character; and some wise men have proved that this life can be lived in the midst of gravest material errors.

இப்பெரியோர் நம்மனோர்க்கு உறுதியுடன் அளிக்கும் நம்பிக்கை இடர்ப்பெருங் கடலினின்று கரையேற்றற்கு நீட்டிய துணைக்கரங்கள் போலுமாம். இன்பத்தை நாடுவதன்முன் இன்பம் என்பது இன்னதெனத் தெரிந்துகொள்ளவேண்டியதே மிகவும் முக்கியம். இந்த ஆராய்ச்சிக்கு உதவவல்லது மானுடமதி. இவ்வாராய்ச்சியின் உண்மையாய முடிவு திருவள்ளுவர் உரைத்தபடி ஊழையும் ஒருவகையில் உப்பக்கம் காண்பதாகும்.

துன்பம் துயரம் கண்ணீர் அழுங்கல்—இவ்வினைத்துச் சொற்களெல்லாம், பொருள் வேறுபாடு பெரிதுமில்லாது நாம், மனிதர் மனத்தினைப் புண்படுத்தும் சில நிலைமைகளுக்குக் கொடுக்கும் பெயர். ஓரே நிலைமையால் இருவருக்கு உண்டாகும் துன்பம் துயரம் முதலியவைகள் ஒருவகையளவினதா யிருக்குமென்ற நியதியில்லை. மற்று, இச்சொற்களை நாம் துருவிப் பார்ப்போமெனின், இவைகளால் குறிக்கப்படும் மனோவிகாரங்கள், நடைபெறும் நம் குற்றங்களின் அடிச்சுவடுகளே ஆவது புலப்படும். குற்றங்களில் சீரிய குற்றங்களும் உள, அற்பக்குற்றங்களும் உள. ஆதலின், குற்றங்கள் சீரியனவாயிருக்குங்கால், அதனால் விளைந்த துன்பந்தான், பெரும்பாலும் இன்பத்திற்கு இணை என்னலாகும். ஒருதாரணம் காட்டுவோம்.

காதலால் தன்வயந் துறந்து நிற்பது குற்றத்தின்பாற்படும். மெய்வரு போகத்திற்கு விழைந்து நாடுகின்ற காமம் அற்பக்குற்றமாகும்; மற்று உண்மைக் காதல் உயிரைப்பற்றி இணக்க அதனால் தன் வயமழிந்து திரிவது குற்றமாயினும், இக்குற்றம் சீரிய குற்றமெனச்செப்பற்குரியது. இரண்டும் குற்றமாதலால ஈரிடத்தும் துன்பம் விளைகின்றது. ஆயினும் காமத்தின் இழிந்த குற்றத்தால் உழலுந் துன்பமானது துன்பமேயாய்த் தொடர்வதல்லால் அதற்கு வேறோர் கதியில்லை. இதற்கெதிர் மெய்க்காதல் உய்க்கின்ற துன்பத்திற்குத் துன்பமேபாய்த் தளர்வடையும் கதியன்றி இன்பமேபோல் சுவைக்கின்ற செம்மையுமுளது. சூதாடிக் கைப்பொருளிழந்த ஒருவன் துயரினையும், காதலனைப் பிரிந்திரங்கும் ஒரு தலைவியின் துயரினையுட் ஒப்புநோக்கிப் பார்க்குமளவில், ஒன்று இருண்டு கைப்பதும் மற்றது ஒளியுடன் சுவைப்பதும் செவ்விதின் அறியப்படும். மூலை தேடி முட்டிக்கொண்டு மூதேவி யென்னக்கிடக்கும் முன்னது; பின்னது ஆகாயவெளியில் கடலிற்குமுன் சென்று வருந்துமொரு படிவமாயிருக்கும். பலவகைத் திருக்களில் இதனைத் துயரத்திரு என்றழைக்கவும் அழைக்கலாம். ஆதலாலன்றோ, இரங்கற் செய்திபை நம் தமிழ் முதியோர் நெய்தற்றிணையில் அமைத்துக் கடலிற்கெதிரே நிகழ்த்தினர்.

# குன்றுடையானும் மக்களும்

[147-வது பக்கத் தொடர்ச்சி]

ஒரு மாதம் ஆயிற்று. குன்றுடையான் விதைத்தகாட்டிலே, காற்றாடும் பயிர் கூத்தாடி நின்றது. பங்காளிகள் விதைத்த காடுகளில் பயிர் முளையிலேயே கருகிப்போயிற்று. அவர்கள், குன்றுடையான் காட்டை வந்து பார்த்து, கருகரு வென முளைத்திருந்த பயிரைக் கண்டு பொறாமையுற்று, வீட்டுக்குப் போய்த் தங்கள் மனைவியர்களை அழைத்து, விதைத்தவசங்களைக் குன்றுடையானுக்கு வறுத்துக் கொடுத்தது போல் நன்றாய் வறுக்கச் சொல்லி, தாங்கள் விதைத்திருந்த காடுகளை அழித்து மீண்டும் விதைத்தார்கள். அத்தவசங்கள் மண்ணோடுமண்ணாய்ப் போயினவேயன்றி, முளைத்தன அல்ல.

பத்துநாட் கழிந்தபின், குன்றுடையான் காட்டில் பயிர் உழவுக்கு வந்தது. அதைக்கண்ட பங்காளிகள் தங்கள் வேளாண்மை அழிந்து போனதை நினைந்து கொதிப்புற்று, தம்தம்பி விளைவித்த பயிரை அழிக்க எண்ணி, அவனறியாமல் தலைக்கு இரண்டேர் மாடாக இருபத்துநான்கு ஏர்மாடுகளை அவன் காட்டிலோட்டித் தின்ன விடுத்தார்கள். அம்மாடுகள் பயிர்களை அழிக்க, கட்டைகள் மாத்திரம் மீந்து நின்றன. அக்கட்டைகளும் ஒருக்கால் தளிர்க்கக்கூடும் என்றஞ்சி, பங்காளிகள் அவ் விருபத்துநான்கு ஏர்களையும் ஓட்டிக் கட்டைகளைப் பெயர்த்துத் தள்ளிவிட்டு வீட்டுக்குப்போனார்கள்.

அன்றிரவு பெருமழை பெய்தது. குன்றுடையான் காட்டில் வெள்ளம் பெருகி, பங்காளிகள் உழுத பூமியை நிரவிச் சாய்ந்தகட்டைகளைச் சமன்செய்யவே கட்டை தளிர்த்தது; பயிர் தூர்கட்டி நின்றது. ஐந்து நாட்களுக்குப்பின் குன்றுடையான் போய்த் தன் காட்டைப் பார்த்து, அண்ணன்மார்கள் தன் காட்டை நன்றாக உழுது பக்குவப் படுத்தினார்களென்று எண்ணி மகிழ்ந்து, வீட்டுக்குத் திரும்பிவந்து மனைவியிடம் செய்தியைச் சொல்லி, அண்ணன்மாரைப்புகழ்ந்தான். காடு விளைந்ததென்று தாமரையும் களிப்புற்றாள்.

மூன்றுமாதங்க ளாயின. கல்லாங் காட்டில் கம்பு விளையக் கதிர் தலைசாய்ந்து நின்றது; கொள்ளும் சோளமும் கூத்தாடி நின்றன. பங்காளிகள் வந்து காட்டைப் பார்த்து, சோளம் வறண்டுபோயிற்று என்று நகைத்தார்கள்; கொள்ளும் கம்பும் விளைந்தனவென்று வயிற்றைப் பிசைந்துகொண்டு போனார்கள்.

மூன்றாம் நாட் காலையில் குன்றுடையானும் மனைவியும் காடுபார்க்கப்போய்ச் சோளத்தைப் புடைநீக்கிப் பார்க்கையில், ஒவ்வொரு சோளமும் முத்துப்போல் உருண்டு திரண்டிருத்தலைக் கண்டு மகிழ்ச்சியுற்று, மறுநாள் கம்பறுக்கவேண்டுமென்று பேசிக்கொண்டு வீடுசேர்ந்து, மாதிகனைக் கூப்பிட்டுத் தங்கள் காட்டில், வடக்குமூலையில், வட்டக்களம் போடச்சொன்னார்கள். அவன் அவ்வாறே களம் சுத்தஞ் செய்தான்.

மறுநாள் திங்கட்கிழமை யன்று, தாமரை ஆண் கூலி ஆறு வள்ளமென்றும் பெண்கூலி நான்குவள்ளமென்றும் சொல்லி வேலைக்குக் கூலி கூப்பிட்டாள். இந்த ஏறிய கூலியைக் கேட்டு ஊர்ச்சனங்கள் திரண்டு வந்து கம்புவெட்டிக் களஞ்சேர்த்தார்கள். அன்று மாலை, கூலிக்காரர் ஒவ்வொருவருக்கும் தாமரை ஒவ்வொரு பிடிக் கம்பங்கதிர் கொடுத்தனுப்பினாள்; கணவனை இரவல்மாடுகள் வாங்கிவரச் சொல்லி, பத்துத் தாம்பு ஓட்டுவித்தாள்; மறுநாள் களம்போட்ட மாதிகனுக்குப் புறவாய் ஒதுக்கி மூன்றில் ஒருபங்கு கணவனை யளந்துகொடுக்கச் சொன்னாள். மலைபோலக் குவிந்த கம்பின் பக்கலில் ஐயன் உட்கார்ந்து வள்ளங் கொண்டு அளந்தான். அந்த வேளையில் பத்துப் பரதேசிகள் அங்குத் தோன்றினார்கள். குன்றுடையான் அவர்களை அண்ணாந்து பார்க்கவும் தாமரை, பரதேசிகளுக்கு, ஆளொன்றுக்கு வள்ளமொன்று அளந்து போடும்படி கணவனுக்குச் சொன்னாள். ஐயன் அளக்க அளக்கப் பரதேசிக் கூட்டம் பெருகிற்று. மாலைப் பொழுது ஆகும்வரையிலும் ஐயன் அளந்தளந்து சலித்தான்.

பின்பு, மீந்த கம்பை ஆட்களைக்கொண்டு வீட்டுக்குக் கடத்தினார்கள். தாமரை கண்ணிக் கயிற்றையும், அடுத்த வருடம் விதைப்பதற்கென்று மூன்று வள்ளக் கம்பையும் தன்கூடையிற் போட்டு, சும்மாடு சுற்றிக் கூடையைத் தலைமேல் வைத்துக்கொண்டு, கணவனோடு வீட்டுக்குத் திரும்பினாள். வருகின்ற வழியில் மூன்று பரதேசிகள் எதிர்ப்பட்டுத் தருமங் கேட்டார்கள். தாமரை கூடையை இறக்கிவைத்து, அந்தமூவர்க்கும் மூன்றுவள்ளக் கம்பையும் அளந்துகொடுத்து, வெறுங்கூடையை வீட்டிற்குக் கொண்டுபோகக்கூடாதென்று, அவர்களைக் கேட்டு ஆளுக்கொருபிடி கம்பு வாங்கிக் கூடையிற்போட்டுக்கொண்டு வீடு சேர்ந்து, கூடையைத் திண்ணையில் இறக்கிவைத்து, கால் முகஞ் சுத்திசெய்து வீட்டைத்திறந்தாள். திறக்கையில் கதவு முட்டக் கம்பு நின்றதைக் கண்டு கணவனும் மனைவியும், எல்லாம் கடவுள்செயலென்று களிப்புற்றார்கள்.

மறுநாள் தாமரை புதுக் கம்பு சமைத்து ஊருக்கு விருந்துசெய்தாள்.

மறுநாள், கணவனும் மனைவியும் கம்பறுத்த கூலிகளுக்குக் கூலியளந்தார்கள் ; பின்பு கொள்ளடித்தார்கள். கொள்ளு நூறு சலகை ஆயிற்று.

சிலநாட் கழிந்தபின், குன்றுடையானும் மனைவியும் கூலிகளை யழைத்துக்கொண்டுபோய்ச் சோளம் அறுத்துக் களஞ் சேர்த்தார்கள். சோளத்தைத் தடியால் தட்டி அடிக்க, முத்துப்போற் சோளம் மலையளவு குவிந்தது. அவ்வருடம் அத்தகைய சோளம் அந்த நாட்டிலேயே விளையவில்லை. குன்றுடையான் பெரிய வீட்டுக்கவுண்டன்பாற் சென்று, ஒரு வண்டி கேட்டு வாங்கிவந்து, மூன்றுநாள் ஆறு பொழுது ஓட்டிச் சோளத்தை வீடு சேர்த்தான். அவன் வீட்டில் நிற்கவும் இடமில்லை.

அவ்வருடம் விளைந்த தானியங்களை விற்றதினால் குன்றுடையானுக்குத் திரண்ட செல்வம் கைகூடிற்று.

தாமரை செல்லாண்டியம்மன் கோவிலுக்குத் திருப்பணி செய்யத்தொடங்கி, மண்ணாற்கட்டிய சுவரைக் கல்லாற் கட்டுவித்தாள்; இரும்பாலானதையெல்லாம் வெள்ளியாற் செய்வித்தாள் ; கோபுரங் கட்டுவித்துத் தங்கக்கலசமும் செய்து அமைத்தாள் ; ஊர்ச் சனங்களை யழைத்து, சம்புலிங்க பண்டாரத்துக்குப் பணங்

கொடுத்து, வாழைப்பழம் ஓர் ஆயிரம் வாங்கிவந்து, பாற்பூசை, பழப்பூசை, தேன்பூசை செய்வித்து அபிடேகம் முடித்தாள்; கோவிலில் நித்தப்பூசை செய்வதற்குச் சம்புலிங்க பண்டாரத்தை நியமித்து, மூன்று காலப்பூசையும் ஏற்படுத்தி, செலவுக்கு ஐந்து வள்ளக் காடும் மானியம் விட்டாள்; பண்டாரத்துக்குத் தட்டக் காணிக்கையும், தளிகை ஓரகப்பையும், தேங்காய் ஒரு மூடியும் மேல்வரும்படி யென்று திட்டஞ் செய்தாள்.

இதற்குப் பின் ஒவ்வோராண்டும் பொன்வள நாட்டில் காலந்தவறாது மழைபெய்யக் குன்றுடையானுக்கு நல்ல விளைச்சல் விளைந்தது. மாமியார் கொடுத்த ஆட்டையும் மாட்டையும் முன்னிட்டு அவனுடைய பட்டிபெருகிற்று; பாற் பசுக்கள் பெருகின; வற்றாத செல்வம் வளர்ந்ததுகாண் அப்பொழுது. பின்னும் பத்துவருடங்களில் குன்றுடையான் நிகரற்ற செல்வனானான்.

தாமரைநாச்சி,சிற்றூலைப் பட்டணத்தின்கண்உள்ள கொற்றர்களை யழைப்பித்து, தன் கணவனுடைய தகப்பன் வாழ்ந்த பாழ்பட்ட பழையவீட்டை இடித்து, அவ்வீட்டு நிலையிலே, தூணுக்குத்தூண் தூண்டா மணிவிளக்கு எரியத்தக்கதாய், பொக்கிஷ மண்டபமும் தானியக் களஞ்சியங்களும் அடுக்களையும் நீராடு மண்டபமும் படுக்கை யறைகளும் பாங்கியர் மண்டபமும் அமைந்ததாய்ப் பெரிய மாளிகையொன்று கட்டுவித்தாள்; நல்ல நாளிலே அம்மாளிகையிற் குடிபுகுந்து தானதருமங்கள் கொடுத்து,ஊரை யழைத்து விருந்து செய்து கணவனோடு மகிழ்ந்திருந்தாள்.

இவ்வாறு சில வருடங்கள் கழிந்தன.

இப்படி யிருக்கும் நாட்களிலே, ஒருநாள், தாமரை தன் கணவனை யணுகி, 'இந்த நாட்டில் உங்களுக்குரிய கணக்கு மணியங்களையும் பூமிகளையும் உங்கள் பங்காளிகள் அநுபவித்துக்கொண்டிருக்கிறார்களே. அவற்றை நாம் மீண்டும் பெறுவதற்கு வழியுண்டா?' என்றாள்.

'ஏன் இல்லை? அவற்றை நாம்கேட்போமானால் அண்ணன்மார் கொடுப்பது சந்தேகம். நான் முன்பு உனக்குச் சொன்னபடி, சோழமன்னரிடத்துச் சென்று முறையிட்டால் அவற்றை மீட்கலாம்' என்றான் குன்றுடையான்.

'அப்படியானால், நீங்கள் சோழமன்னரிடம் போய் வாருங்கள். நமக்குரியவற்றை நாமேன் இழக்கவேண்டும்?' என்றாள் தாமரை.

'நீ போகவேண்டும் என்றால் போய்வருகிறேன். அவரைக் காண்பதற்கு உலுப்பை சேகரித்துவை. நாளைக் காலையில் புறப்படுகிறேன்' என்றான் கணவன்.

மறுநாட் காலையில் தயிர்ப்பானைகளையும் பாற்குடங்களையும் பலவிதமான பழங்களையும் பத்து ஆட்கள் சுமந்துவர, குன்றுடையான் பொன்முடிப்பை எடுத்துக்கொண்டுபுறப்பட்டு,மாலைப்பொழுதில் உறையூரை யடைந்து, அரண்மனைக்குப்போய், உக்கிராணத்தில் உலுப்பை செலுத்தி, அரசன் சமுகத்துக்குப்போய் நின்று, தன் பொன்முடிப்பை யவிழ்த்துக் காணிக்கை வைத்துக் கும்பிட்டான்.

சிவசோழ மன்னர் ஏறிட்டுப்பார்த்துக் குன்றுடையானை அறிந்துகொள்ளாதவராய், 'நீ, யாரப்பா? எந்த ஊர்?' என்றார்.

'சுவாமி, நான் பொன்வளநாட்டில் சிற்றூலைப்பட்டணத்தில் வாழ்ந்திருந்த அப்பாக்கவுண்டன் மகன் குன்றுடையாக் கவுண்டன்' என்றான் ஐபன்.

'ஓ! ஓ! அப்பாக் கவுண்டன் மகனா, நீ? உன் தகப்பனர் அடிக்கடி நம்மிடம் வந்து உலுப்பை செலுத்திப் போவதுண்டு. அவர் இறந்துபோனதும் நமக்குத் தெரியும். நீயேன் இவ்வளவுகாலம் நம்மை வந்து பார்க்கவில்லை?' என்றார் அரசர்.

'சுவாமி, அதற்குக் காரணஞ் சொல்கிறேன். எனக்குப் பத்தாம் ஆண்டு நடக்கையில் என் தாய்தந்தையர்கள் இறந்துபோனார்கள். அப்பொழுது பாய்ச்சலூரில் வசிக்கும் பங்காளிகள் என்னைத் தங்கள் வீட்டுக்கு அழைத்துப்போய், என் தகப்பனர் சம்பாதித்த பூமிகளையும் பணத்தையும் பறித்துக்கொண்டு என்னையடித்துத் துரத்திவிட்டார்கள். நான் அநாதையாய்த் திரிந்து ஓமந்தூர்போய்ப் பிராமணர்களை அண்டிப் பத்துவருஷம் எருமைமேய்த்து வயிறுவளர்த்தேன். பின்பு வெள்ளிவளநாடு சென்று, என்னுடைய மாமன் மகளை உரிமைக்கலியாணஞ் செய்துகொண்டு மனைவியோடுபிறந்தவூருக்குவந்து,வேளாண்மைசெய்துஆண்டவனருளாலும் தங்கள் கிருபையினாலும் கொஞ்சம் பணம் சம்பாதித்து நிலமும் வாங்கினேன். ஒரு புது வீட்டையும் கட்டியிருக்கிறேன். என் பங்காளிகள் கைப்பற்றிக்கொண்ட பூமிகளையும், கணக்கு மணியங்களையும் எனக்குத் திரும்பக் கொடுத்துவிடவேண்டும் என்று சமுகத்தில் முறையிட்டுக்கொள்ள வந்திருக்கிறேன். சுவாமி, என் வழக்கைத் தீர விசாரித்து, என் உடைமை எனக்குச்சேரும்படி உத்தரவாகவேண்டும்' என்று குன்றுடையான் அரசனை வணங்கினான்.

இது கேட்டு அரசர், 'மெய்தான், உன் தகப்பனர் அநுபவித்த கணக்கு மணியங்களையும் பூமிகளையும் உன் பங்காளிகள் நீ இறந்துபோனாய் என்று சொல்லித் தங்கள் பேருக்கு மாற்றிக்கொண்டமை இப்பொழுது நினைவுக்கு வருகிறது. நாம் உன் பங்காளிகளையும் வருவித்து, வழக்கு விசாரித்துத் தீர்ப்புச் சொல்கிறோம். அவர்கள் வரும்வரையில் நீ நமது அரண்மனையிலேயே சாப்பிட்டுக்கொண்டு இரு' என்றார்.

குன்றுடையான் 'சித்தம்' என்று சொல்லி வணங்கி அப்பாற்போனான்.

அரசன் அழைக்கப் பங்காளிகளும் வந்துசேர்ந்தார்கள். வழக்கு விசாரிக்கப்பெற்றது. மன்னர், பங்காளிகள் செய்த வஞ்சனைக்காக அவர்களைக் கடிந்து அச்சுறுத்தி, குன்றுடையானுக்குச் சேரவேண்டிய காணி கல்வெட்டுகளையும் கணக்கு மணியங்களையும் மீட்டுக்கொடுத்து, பட்டயமுந் தந்து, வரிசையுடன் அவனை ஊருக்கனுப்பினார். பின்,பங்காளிகள், வந்தது கேடு என்று அடிவயிற்றைப் பிசைந்துகொண்டு பாய்ச்சலூருக்குப் போனார்கள்.

குன்றுடையான் சிற்றூலைப் பட்டணத்துக்குத் திரும்பிவந்து, கணக்கு மணியங்களை நடத்துதற்கு மாதம் ஒன்றுக்குநான்கு பொன் சம்பளத்தில் தகுதிவாய்ந்த பத்துப் பேரை நியமித்தான்; தன் வயல்களை மேற்பார்க்கச் சந்தனக்குடும்பன் என்பானை நியமித்தான்; உக்கிராணத்துக்குக் காவலாக உப்பிலியக் குப்பமுத்தை நியமித்தான்.

இவ்வாறாகக் குன்றுடையன் நாட்டுக்கு முதற்குடி யென்றும் பெரிய தனக்காரனென்றும் புகழ்விளங்க அதிகாரஞ் செலுத்தினான்.

# மானத சாத்திரம்

## [ PSYCHOLOGY ]

[32-வது பக்கத் தொடர்ச்சி]

குறிப்பு.

ஒரு யானையைக்காணும்யான், யானைகளுக்கெல்லாம் பொதுவாகஉள்ள இயல்புகளையும் காண்கிறேன் அன்றோ? அவ்வாறு அதன் பொதுஇயல்புகளைக் கண்டதால் அல்லவா, பின்னே நான், வேறோர் யானையைக் காணும்போதும், அங்கும் முன்கண்ட பொதுஇயல்புகளைக் காண்பதால், அப்பொருளையும் யானை என்று சுட்டி யறிகின்றேன். முன் யானையைக் கண்டபோது பொதுவுணர்வாக எனது மனதில் எழுந்த பொதுவியல்புகளைப் பின்கண்ட யானையினிடத்தும் திரும்பவும் காணுதலால் யானையின் மறித்துணர்வு எழுகின்றது. அல்லாக்கால் யானையை யானைஎன்று எவ்வாறு யான் தெரிந்துகொள்ளக்கூடியவனாகிறேன்? எனவே, பின்னே நான் ஓர் யானையைக் காணும்போது எழும் சிறப்புணர்விலே, மறித்துணர்வும் இருக்கின்றது; முன்கண்ட பொதுவியல்புகளின் பொது உணர்வும் இருக்கின்றது. சிறப்புணர்வில் எல்லாம் இவ்வாறு பொதுவுணர்வும் ஒன்றாக இயைந்து கிடக்கும்போது அதனை வேறு பிரிப்பதால் பயன் என்ன? பொதுவுணர்வு இல்லாதபோது மறித்துணர்வும் இல்லை; சிறப்புணர்வும் இல்லை. ஆகவே ஏதேனும் ஒரு பொருளைக் குறிப்பதென்றால் அதன் பொதுவுணர்வு பெறுதல் அன்றோ? உணர்வு எழுமிடத்தில்எல்லாம் இப் பொதுஉணர்வு எழுமானால், உயர்ந்த நிலையிலுள்ள உயிர்களிடைமட்டும் அது காணப்படுகின்றதென்று எவ்வாறு கூறக்கூடும். கீழ்நிலையிலுள்ளன விடத்து அப்பொதுவுணர்வு இல்லை என்று எவ்வாறியம்புவது?

நான் ஒரு கிச்சிலிப் பழத்தைப் உணரும்போது அதற்குமுன் நான் உணர்ந்த கிச்சிலிப் பழங்களின் துய்த்துணர்வுமட்டுமா எனது மனதில் எழுகின்றது? கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் பல பொருள்களின் துய்த்துணர்வும் அன்றோ நினைவிற்கு வருகின்றது. கிச்சிலிப்பழத்தைக் காணும்போது என் மனநிலை எவ்வாறு உள்ளது? என்எதிரே அப்பொருள் ஒரு குறித்த இடத்தில் இருப்பதாகக் காண்கிறேன். அதனை ஒரு கெட்டிப்பொருள் என்று கருதுகிறேன். அதனை எடுக்க எனது கையை நீட்டும்போது, எனது தசைநார்கள் அதன் எடைக்கு ஏற்றபடி முன்னாகவே முறுக்கு ஏறி என்னையும் அறியாமல் நிற்கின்றன. இருப்புருண்டையை எடுக்கும்போது தசைநார்கள் முறுக்கேறி இருப்பதற்கும், இந்தப் பழத்தை எடுக்கும்போது முறுக்கேறி இருப்பதற்கும் எவ்வளவு வேற்றுமை. ஆகவே கிச்சிலிப்பழத்தை யுணரும்போது அதன் எடையும் என் மனதில் இருக்கின்றது; அதனால் அல்லவா, அதனை எடுக்கும்போது எனது தசைநார்கள் அதற்குத் தக்கவாறு முறுக்கேறுகின்றன. ஓலையால் செய்துவைத்த கிச்சிலிப்பழமானால், அதனை எடுக்கச்சென்ற தசைநார்கள் ஏமாற்றமடைகின்றன அன்றோ! அப்பழத்தைக் கீழே தள்ளுகின்றேன். கீழே விழும் என்றும் நான் எதிர்பார்க்கின்றேன் அல்லவா? மெல்லிய ஏட்டினாற் செய்ததொன்றானால், தள்ளுண்ட பழம் கீழே விழாது காற்றிற் பறக்கின்றது. கிச்சிலிப் பழம் என்று நினைத்திருந்த நான் அப்போது ஏமாற்ற மடைகின்றேன். அப்பழத்தின் வீழ்ச்சிநிலையும் நினைவில் இருந்ததால் அல்லவா பின்னர் அவ்வாறு ஏமாற்றம் அடைகிறேன். அப்பழத்தைச் சுவரில் வீசி எறிகின்றேன். நசுக்குண்ணும் என்று எதிர்பார்க்கிறேன். ஆனால் மரப்பாலால் (ரப்பர் Rubber) செய்த செயற்கைப் பழமானால், அது நசுக்குண்ணாது போனவழியே திரும்பி என்னைநோக்கி வருகின்றது. அதனைக்கண்டு ஏமாற்ற மடைகின்றேன்? ஏன், கிச்சிலிப்பழத்தின் நசுக்குண்ணும் இயல்பு எனது மனதில் இருந்ததால் அதற்கேற்க நான் எதிர்பார்த்தபடி இப்போது அது நடக்கவில்லை என்றன்றோ ஏமாற்ற மடைகின்றேன். ஆகவே கிச்சிலி என்று உணர்ந்தபோது, நிறம், சுவை, மணம், வடிவு, எடை, இடம், கெட்டிப்பொருள் களின் வீழ்ச்சிப்பண்பு நசுக்குண்டு முறியும்இயல்பு முதலிய பலவும், நினைவில் இருக்கின்றன வல்லவா? இந்தப் பழைய துய்த்துணர்விற்குத் தக்கவாறல்லவா நாம் நடந்துகொள்ளுகிறோம்.

இவையனைத்தும் அப்பொருளின் சுட்டுநிலை யாகின்றன. இவற்றிலே சிலபோது, ஒருசில பண்புகளும், வேறு சிலபோது வேறுசில பண்புகளும் நமது நினைவின் முன்னிலையாக வந்து நிற்கின்றன. நீர் வேட்கையுற்றபோது எதிரிட்ட பழத்தைக் கண்ட நான் அதனது இனிய சாற்றையே நினைக்கின்றேன். நாய்மேல் எறிவதற்குக் கல்லைத்தேடும்போது இப்பழம் எதிரிட்டால் இதனை எடாது அருகில் இருக்கும் மரவுருண்டையை எடுத்து வீசி எறிகின்றேன். எனது நண்பன்மீது வீசி எறிந்து விளையாட ஏதேனும் ஒரு பொருளைத் தேடும்போது இப்பழம் அகப்படுமானால், இதனையே எடுத்து வீசி எறிகின்றேன். பின்கண்ட இரண்டு நிலையிலும் அதன் எடை எனது மனதின் முன்னணியில் நிற்கின்ற தல்லவா?

இவ்வாறு பொருள்களை யுணரும்போது அவற்றைப் பற்றியதோர் கட்டடம் நமது மனதில் எழுந்து விளங்குகிறது. இதற்குக் கடைகால்போல ஊன்றிக் கிடக்கும் முன்னுணர்வுகளை 'அறிவுநிலை' எனப் பெயரிட்டு மக்டூகல் என்ற பெரியார் வழங்குகிறார். உணர்வென்னும் ஆறு இம்முன்னுணர்வென்னும் ஊற்றின் நின்றுமே பெருக்கெடுத்தோடுகின்றது. புதியதொரு பூவினை மரநூற் புலமையில்லாதவன் காணும்போது அதனைப் பூவென்றுமட்டும் கண்டு அகமகிழ்கின்றான். அவ்வளவே அவனுணர்வு. மரநூற்புலவனோ அதன் ஒவ்வொரு பண்பினையும் ஒவ்வொரு சினையினையும் உற்றுப் பார்க்கின்றான். அப் பூவின் புல்லி, அல்லி, காம்பு, கருவறை, கருப்பொடி முதலியவற்றை எல்லாம், தனித்தனியாக வெவ்வேறு நோக்கியும், ஒன்றாக வைத்துப் பார்த்தும் உணர்கின்றான். முன்னுணர்ந்த பூக்களின் இனங்கள் எல்லாம் அவனுடைய மனதிற்கு வருகின்றன. அவற்றோடுஎல்லாம் இந்தப் பூவினை ஒப்பிட்டுப்பார்த்து, ஒரு முடிவுக்கு வரு

கின்றான் "இவ்வினத்தைச் சேர்ந்தது. இப்பூ" என்ற வடிவமாக அவனுடைய உணர்வு உருப்பெற்றெழுகின்றது. இந்த முன்னுணர்வு கீழ்நிலையிலுள்ள உயிர்களிடையேயும் காணக்கிடக்கின்றதன்றோ? புல்லைக் கண்டால் தின்னப்போகும் குதிரை சுண்ணாம்பைக் கண்டால் தின்னப்போவதில்லையே. முன்னுணர்வில்லையானால் புல்லைப் புல் என்று அறிவது எங்ஙனம்?

எவ்வளவு கீழ்நிலையில் இருந்தாலும் இந்த அறிவுநிலை இல்லாமல் உயிர்கள் வாழ முடியாது. எந்தவுயிரும் வெறும் புலக்காட்சியோ டமையாது ஒருபொருளைச் சுட்டியறிந்துணர்தல்வேண்டும். அப்போதுதான் கொளத்தகு பொருளையும் விடத்தகு பொருளையும் உணர்ந்து உயிர்வாழ்தல் கூடும். அல்லாக்கால் பகை என்றும் நட்பென்றும் அறியாது பகையின் வாயிலே வீழ்ந்து மடியவேண்டுவதுதான்.

பொருளை யுணரும் உணர்வு சுட்டுநிலை யாகவேனும் நின்றுவிடலாம், குறிப்புநிலை யாகவேனும் வளரலாம். ஒரு பொருளை "இன்னது இது" என்று அறியாது "ஏதோவொன்று" என்றுமட்டும் சுட்டியறிதல் சுட்டுநிலையாகும் (Denotation-நிர்விகற்பஞானம்) அதன்பண்புகளை உணர்ந்து "இது இன்னது" என்று உணர்தல் குறிப்புநிலை யாகும். (Connotation - சவிகற்பஞானம்). கீழ்நிலையில் உள்ள உயிர்களும் "ஏதோ அங்குள்ளது" என்ற மட்டிலேனும் உணர்வதற்கு யாதேனும் ஓர் அறிவுநிலை பெற்று வளர்தல்வேண்டும். தனக்குவேண்டியவற்றை விரும்பிஉணரும் அறிவுநிலையாம் பற்றறிநிலை ஒன்றும், பகைப்பொருள்களை வெறுத்துணரும் அறிவுநிலையாம் விட்டறிநிலை ஒன்று மேனும் ஒவ்வோர் உயிர்க்கும் இருத்தல் வேண்டும். இவற்றின் வழியே உயிர்கள் செயலுறுதற்கு, பற்றறிநிலைக்கேற்பச் செயலுறுநிலையாகப் பற்றுநிலையும், விட்டறிநிலைக்கேற்பச் செயலுறுநிலையாக விட்டுநிலையும் இருந்தாலன்றி, கேடின்றி எவ்வுயிரும் செயலுறுதல் இயலாது. இவ் வறிவுநிலையும் செயலுறுநிலையும் இவ்வளவிலேனும் வேறுபிரிந்து ஒன்றுபட்டு இருந்தாலன்றோ உயிர்கள் தமக்குஆன பொருள்களைக்கண்டுணர்ந்து அவ்வுணர்விற்கேற்ப அவற்றை அடைய நெருங்கியும், ஆகாத பொருள்களைக் கண்டுணர்ந்து அவ்வுணர்விற்கேற்ப அவற்றினின்றும் அகன்றோடியும் பிழைக்கின்றன. எத்தகைய கீழ்நிலையிலுள்ள உயிரிடத்திலும் அந்த இரண்டு செயல்நிலையும் தக்கபடி தொடர்ச்சிபெற்றிருத்தல் வேண்டும். இத்தகைய மனநிலையிலிருந்துதான் நமது உயரிய மனநிலையும் வளர்ச்சி யடைந்துள்ளது.

ஏதேனும் ஒரு பொருளைப்பற்றி எண்ணும்போது அதனை முன்னிலைப்படுத்தி ஓரிடத்தில் வைத்தே எண்ணுகின்றோம். இவ்வண்ணம் முன்னிலைப்படுத்தும் போதே "அங்கு" என்ற உணர்வும் உடன் எழுகின்றது. நமது உணர்வனைத்தும் இடம்என்ற வடிவத்தோடேயே எழுகின்றன. இவ்வாறு முன்னிலைப் படுத்தினாலன்றி உணர்வும் இல்லை; காட்சியும் இல்லை. ஆதலின் "அங்கு" என்ற உணர்வின்றி ஒருபொருளின் உணர்வும் எழுவதில்லை. "அங்கு அது" என்று முதன்முதலில் எழுகின்ற 'சுட்டுநிலை' யுணர்வே தொடக்கத்திலே "அறிவுநிலை" யாக நின்றது. பிறகு குறிப்புநிலை பல்கிப்பெருகவே பல பொருள்களையும், வெவ்வேறு பிரித்தறிகின்றோம். ஒன்றாய் நின்ற உலகம் பலவாகத் தோன்றுகின்றது. சிறுவன் பூக்களைப்பூவென்ற ஓரினத்தில் அடக்குவான்; பத்துப் பதினைந்து இனங்களில் அடக்குவோம் நாம்; மரநூற்புலவனோ பத்து நூறுபிரமாகப் பிரித்துக்கொண்டே போவான். ஒன்று பலவான வரலாறு ஈதேயாம். ஒன்றேயுளது அதனை அறிஞர்கள் பலவகையாகக் கூறுவர் என்பது மறைமொழியாகும்.

நமது அறிவுநிலையின் வளர்ச்சியை ஆலமரத்தின் வளர்ச்சிக்கு ஒப்பிடுகின்றார் மக்டூகல் என்ற பெரியார். பண்டைய சுட்டுநிலை யளவாக நிற்கும் அறிவுநிலையே இம்மரத்தின் அடிமரமாகும். அதனின்றும் பல கிளைகள் பிரிகின்றன; கிளைகளின்நின்றும் கவைகளும் கவைகளின்நின்றும் கொம்புகளும் கொம்புகளின் நின்றுகவர்களும் கவர்களினின்றும இலைகளும்பிரிந்து பிரிந்து பரவுகின்றன. பின்னர் ஒவ்வொரு கிளையும் விழுதுகளாய் வெவ்வேறு வேர்விட்டுக் கீழே மண்ணில் வந்து ஊன்றி நின்று தாம்தாமே வேறு மரமாகிப் பழமைபோலக் கப்புங்களையும் விடுகின்றன. இவ்வாறு முடிவின்றிப் பல்குவதே ஆலமரத்தின் இயல்பு; அதுவேதான் அறிவுநிலையின் இயல்புமாகும். உயிர்கள் என்ற எண்ணததைப் பார்ப்போம். ஓரறிவுயிர் ஈரறிவுயிர் மூவறிவுயிர் நாலறிவுயிர் ஐயறிவுயிர் ஆறறிவுயிர் என்று பிரித்துணர்கின்றோம். இந்த ஒவ்வோர் கிளையும் ஒவ்வோர் விழுதாய் மரமாய்ப் பெருகுகின்றது. ஆறறிவுயிர்களை, ஆரியர் மங்கோலியர் என்றெல்லாம் பிரித்துணர்கின்றோம் இவ்வாறு பிரித்துப் பிரித்து இம்மரத்தின் இலையாம் தனி மகனிடம் வந்து சேர்கின்றோம். அறிவுநிலையை ஆலமரம் எனச் சொல்லத் தடையில்லையே.

ஒரு பொருளை யுணர்வதென்றால் அதனை நமது அறிவுநிலையாம் ஆலமரத்தில் இந்தக் கிளையில் இந்த இலை என்று குறித்துணர்வதேயாகும். இவ்வாறு உணராதவரையில் திகைத்தே நிற்கிறோம். ஓர் ஆண்மகனைக் கண்டால் மக்கள் என்ற இனத்தில் வைத்து உணர்வதோடு நிற்பது இல்லை; "இந்த ஊரான் இந்தத் தெருவான், இந்த வீட்டான், இன்னவன்" என்று அறியும் வரை திகைக்கின்றோமன்றோ? அல்லாக்கால் என்ன, எங்கேயோ கண்டாற்போல இருக்கின்றது. நெஞ்சில் இருக்கின்றது. வெளிவரவில்லையே" என்று தலையைச் சொறிகின்றோம்.

இவ்வளவும் கூறியதால் குறிப்பு என்றதன் வடிவத்தைச் சிறிது உணர்கின்றோம்.


:: தமிழ்ச் சட்ட புஸ்தகங்கள் ::

| | ரூ. | அ. |
|---|---|---|
| ஸ்டாம்பு, ரெஜிஸ்டர் பலவித பத்திரங்கள் எழுதும் மாதிரியுடன் விவகார சிந்தாமணி | 2 | 8 |
| உயில், பாகம், வார்சு பாத்தியம் ஸ்திரீதன முதலியதுள்ள பெரிய ஹிந்து லா | 2 | 0 |
| சிவில் விவகாரம் பூர்த்தியாயடங்கிய சீவில் லா | 3 | 0 |
| போலீஸ்மாஜிஸ்டிரேட் சம்பந்தமான கிரிமினல்லா | 3 | 0 |
| விவாக வயது சட்டம் | 1 | 0 |
| புது கிராம முனிசீப் சட்டம் | 1 | 8 |
| கிராம சுகாதாரம் | 0 | 2 |

| | ரூ. | அ. |
|---|---|---|
| கிராம பஞ்சாயத்துகோர்ட் ஆகட் | 1 | 4 |
| லோகல் போர்ட் பஞ்சாயத்து ஆக்ட் | 1 | 8 |
| குற்ற சம்பந்தமான இந்தியன் பீனல் கோட் | 3 | 0 |
| ஹிந்து தர்ம ஸ்தாபன சட்டம் | 1 | 0 |
| டிரஸ்டி ஆக்ட் | 0 | 10 |
| பரம்பரை கிராம உத்தியோக ஆக்ட் | 1 | 0 |
| புது இன்கம்டாக்ஸ் சட்டம் | 1 | 0 |
| பெரிய மகமதிய லா | 2 | 0 |
| எஸ்டேட் ஜமீன்குடி நிலச் சட்டம் | 1 | 0 |

வெளி நாட்டுக்கு முன் பணம் இல்லாமல் ஆர்டர் கவனிக்கப்படமாட்டாது.

V. S. T. SAWMY & Co., Vepery, Madras.

# தினகர வெண்பா

[157-வது பக்கத் தொடர்ச்சி]

## III. காமத்துப்பால்

### அதி. 109. தகையணங்குறுத்தல்

114 வேலா சிவயோகி வீரயன்பா லாதரும
சீலாதென் கோவைத் தினகரா—மாலென்ப
பண்டறியேன் கூற்றென் பதனை யினியறிந்தேன்
பெண்டகையாற் பேரமர்க் கட்டு.

[3 வீரியன்பா. 8 மாலானேன்.]

### அதி. 110. குறிப்பறிதல்

115 சூதாம் பருவத் துணைமுலையா ராடவர்க்குச்
சேதாம்பல் விள்ளார் தினகரா—ஏதாகக்
கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்
ளென்ன பயனு மில. [சொற்க

[12 வாய்ச் சொற்கொண். 13 டென்ன.]

### அதி. 111. புணர்ச்சிமகிழ்தல்

116 வானுலகில் மண்ணுலகில் மற்றொன் றிற் கண்ட
தேனுவென வீசுந்தினகரா-மானிடர்[துண்டோ
கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு
மொண்டொடி கண்ணே யுள.

[2-3 இவ்வுலகில் மற்றொன்றுங் 8 மானிடர்கள்.]

### அதி. 112. நலம்புனைந்துரைத்தல்

117 மங்கையர்கள் செய்ய வதனந் தனக்கிணையாய்த்
திங்களையென் சொல்வார் தினகரா—கங்குன்
அறுவாய் நிறைந்த வவிர்மதிக்குப் போல
மறுவுண்டோ மாதர் முகத்து.

[4 தனக்கினியாய். 8 திங்கள்.]

### அதி. 113. காதற்சிறப்புரைத்தல்

118 இன்னமணி வேண்டா வெனவொறுத்த வுண்க
தென்னவு தார தினகரா—மன்னிய [ணுள்
பாலொடு தேன்கலந் தற்றே பனிமொழி
வாலெயி றூறிய நீர்.

[1-6 இன்னமழி வுண்டோ வுரைக்கிலு முங்களிடத்
தென்னவர்தா கோவைத்]

### அதி. 114. நாணுத்துறவுரைத்தல்

119 நாகரா கன்புகழும் நன்குணர்கீக[வ]ர
சீகருணு கோவைத் தினகரா—ஓகோ
கடலன்ன காம முழந்து மடலேறாப்
பெண்ணிற் பெருந்தக்க தில்.

[1-4 மாகதர் கணம் புகல மான்றே ருலாவிவருஞ். 5. சீர்கருணு.]

### அதி. 115. அலரறிவுறுத்தல்

120 தாரார் கமலத் தடம்புயத்தி லின்றெனைநீ
சேரா திருக்கிற் றினகரா—பேராக
ஊரவர் கவ்வை யெருவாக வன்னைசொல்
நீராக நீளுமிந் நோய்.

[4 லின்றிவளைச். 8 பேராத.]

### அதி. 116. பிரிவாற்றாமை

121 தற்பரனை யாறு சமையத்தை யுங்கடந்த
சிற்பரனைப் போற்றுந் தினகரா—எற்பிரிந்து
செல்லாமை யுண்டேல் எமக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை.

[8 எற்பரிந்து. 11 லெனக்குரை.]

### அதி. 117. படர்மெலிந்திரங்கல்

122 மின்னார் நகைக்கமத வேள்பகைக்க நாணொருத்தி
தென்னு வலரெண் டினகரா—உன்னாலே
காமக் கடும்புனல் நீந்திக் கரைகாணேன்
யாமத்தும் யானே யுளன்.

[6 வலரென்.]

### அதி. 118. கண்விதுப்பழிதல்

123 போதளவுஞ் சங்கப் புதுமுத்தின் சங்கவதி
சீதளசெந் தாமத் தினகரா—நீதழுவ
வாராக்காற் றுஞ்சா வரிற்றுஞ்சா வாயிடை
யாரஞ ருற்றன கண்.

[2-4 சங்கரிக்கப் புன்னிறத்த வஞ்சவதி.]

### அதி. 119. பசப்புறுபருவரல்

124 தாயிழைக்குஞ் சொல்லாற் றளர்ந்துனது மாலை
சேயிழைக்கு வேறூர் தினகரா-தூய [பெருச்
விளக்கற்றம் பார்க்கு மிருளேபோற் கொண்
முயக்கற்றம் பார்க்கும் பசப்பு. [கன்

[3-4 தளர்ந்துமண மால்பெற்ற. 6 மென்றே.]

### அதி. 120. தனிப்படர்மிகுதி

125 உத்தமசெயத் தியாகியென்ப ருன்னைப்புன் மாலை
சித்துத் தளர்ந்தாள் தினகரா—பத்தில் [யிலிச்
ஒருதலையா னின்னாது காமங்காப் போல
விருதலை யானு மினிது.

[1-4 உத்தமசெயத்தியாகி யென்பருன்னைமாலையிலோர்.
5-6 சித்திகமுந்தாராய். 8 பற்றில்.]

### அதி. 121. நினைந்தவர்புலம்பல்

126 எங்கிருந்து முன்னைவிடா தேநினைப்போ மிப்புவி
செங்கை முகிலே தினகரா—மங்கையருக் [மேற்
குள்ளினுந் தீராப் பெருமகிழ் செய்தலாற்
கள்ளினுங் காம மினிது.

[2-4 முன்னை யிடைவிடாதே நினைப்பாள். 5-6 தெங்கிருந்த கோவைத்.]

### அதி. 122. கனவுநிலையுரைத்தல்

127 நேர்ந்த கனவிலெம்மை நேற்றிரவு வந்துநீ
சேர்ந்தறியாய் கோவைத் தினகரா—போந்து
நனவினு னல்கா தவரைக் கனவினாற்
காண்டலி னுண்டென் னுயிர்.

[2 கனவிலெனை. 3 நேற்றிரவில் 5-6 சேர்ந்ததறியார்.
8 போந்த.]

### அதி. 123. பொழுதுகண்டிரங்கல்

128 உன்பவனி காட்டுமா லொன்று பெறுகோவைத்
தென்பவனி காட்டுந் தினகரா—என்போல்வார்
காலைக்குச் செய்தநன் றென்கொ லெவன்கொல்
மாலைக்குச் செய்த பகை. [யான்

[2-4 காட்டுமுத லொன்றுபிறற றெண்டிநலோன். 8 நின்போல்வார்.]

### அதி. 124. உறுப்புநலனழிதல்

129 கொங்கேறு தண்களபக் குன்றையச்சு தேந்திரன்
செங்கோல் செலுத்துந் தினகரா—இங்கே [றன்
பணைநீங்கிப் பைந்தொடி சோருந் துணைநீங்கித்
தொல்கவின் வாடிய தோள்.

அதி. 125. நெஞ்சோடுகிளத்தல்

130 மன்றலமர் சோலை மறுகு தமிழ்மணக்குந்
தென்றலமர் கோவைத் தினகரா—வென்றே
இருந்துள்ளி யென்பரித நெஞ்சே பரிந்துள்ளல்
பைதனேய் செய்தார்க ணில்.
[1 மன்றலார். 2 மாலை. 5 தென்றலூர்.]

அதி. 126. நிறையழிதல்

131 என்றுமுனைக் கூடேமென் றிட்ட விரதமுட்டச்
சென்றதில்லை யன்றோ தினகரா—நின்று
நினைந்தீயி லிட்டன்ன நெஞ்சினர்க் குண்டோ
புணர்ந்தூடி நிற்பே மெனல்.
[2 கூடேனென். 5-6 சென்றதிலைக் கோவூர்த். 8 நன்று.]

அதி. 127. அவர்வயின்விதும்பல்

132 எங்களுரை கேளா யிரங்கா யினிநாளைச்
செங்கை முகிலே தினகரா—மங்கை
பெறிலென்னும் பெற்றக்கா லென்னு முறிலென்
உள்ள முடைந்துக்கக் கால். [னும்

அதி. 128. குறிப்பறிவுறுத்தல்

133 தேர்த்திருநாள் பூசைத் திருப்பணி நீகண்டபின்
தீர்த்தமுள கோவைத் தினகரா-பார்த்தால்[னைத்
மணியிற் றிகழ்தரு நூல்போன் மடந்தை
யணியிற் றிகழ்வதொன் றுண்டு.
[1 சேர்த்திருநாள். 4 கண்டவினை. 5 தீர்த்தபிரான். 8 கோத்த.]

அதி. 129. புணர்ச்சிவிதும்பல்

134 இந்நிலங்க ளெங்கு மிடர்நீங்க வெங்களுக்காய்த்
தென்னிலங்கை வென்றாய் தினகரா-உன்னை யெ
காணுங்காற் காணேன் றவறாய காணுக்காற்[திர்
காணேண் றவறல்ல வை.
[3-4 மிரதிநீ யெங்களுக்காய்த்.]

அதி. 130. நெஞ்சோடுபுலத்தல்

135 வந்தநெஞ்சை மீள வரவிட வொண்ணுதோ
செந்தமிழ்சேர் கோவைத் தினகரா—பைந்
[தொடியார்
துன்பத்துக் காரே துணையாவார் தாமுடைய
நெஞ்சந் துணையல் வழி.
[3-4 வரவிடவு மொண்ணுத. 5-6 செந்திருவாள் கோவே.]

அதி. 131. புலவி

136 நேர்கண்டா யூட னிலவுகண்டாய் மன்மதனூர்
தேர்கண்டாய் கோவைத் தினகரா-சேர்கண்டாய்
உப்பமைந் தற்றாற் புலவி யதுசிறிது
மிக்கற்றா னீள விடல்.
[1-2 நேர்கண்டாய்கூட. 3 நினைவு கண்டாய். 4 யடல் மதனன். 8 சேர் கண்ட.]

அதி. 132. புலவிநுணுக்கம்

137 பாருலா வுங்கண் படைத்தமின்னார் வீதியெல்
சீருலா வந்தாய் தினகரா—ஊரிலுள்ள [லாஞ்
பெண்ணியலா ரெல்லாருங் கண்ணிற் பொதுவுண்
நண்ணேன் பரத்தநின் மார்பு. [பர்
[5-6 சீருலாங் கோவைத்.]

அதி. 133. ஊடலுவகை

138 வெம்மனத்தி லூடல் விளைத்துடனே கூடிமதன்
செம்மனம்போல் வாழி தினகரா--தம்மனத்தால்
ஊடுதல் காமத்துக் கின்ப மதற்கின்பங்
கூடி முயங்கப் பெறின்.
[3 விளைந்திடப்பின். 4 மேவினையே. 5 செம்மனே போல். 8 தன் மனையில்.]

தினகர வெண்பா

முற்றிற்று.

---

# தமிழ்ப் பாடம் 9.

## நள வெண்பா—சுயம்வர காண்டம்

[145-வது பக்கத் தொடர்ச்சி]

23. என்று நுடங்கு மிடையென்ப வேழுலகு
நின்ற கவிகை நிழல்வேந்தே—யொன்றி
யறுகாற் சிறுபறவை யஞ்சிறகால் வீசுஞ்
சிறுகாற்றுக் காற்றுது தேய்ந்து.

பதப்பிரிவு:—என்றும் நுடங்கும் இடை என்ப ஏழு உலகும் நின்ற கவிகை நிழல் வேந்தே ஒன்றி அறுகால் சிறு பறவை அம் சிறகால் வீசும் சிறு காற்றுக்கு ஆற்றுது தேய்ந்து.

அன்வயம்:—ஏழு உலகும் கவிகை நிழல்நின்ற வேந்தே, அறுகால் சிறுபறவை அம்சிறகால் ஒன்றி வீசும் சிறுகாற்றுக்கு இடை ஆற்றுது தேய்ந்து, என்றும் நுடங்கும் என்ப.

பதவுரை.

ஏழு உலகும் - ஏழு உலகத்திலும்
கவிகை (உனது) குடையின்
நிழல் - நிழலானது
நின்ற - தங்கிய
வேந்தே - அரசனே,
அறுகால் - ஆறு கால்களையுடைய
சிறு - சிறிய
பறவை - பறவைகளாகிய வண்டுகள்
அம் - (தமது) அழகிய
சிறகால் - சிறகுகளினால்
ஒன்றி - நெருங்கி
வீசும் - வீசுகின்ற
சிறு - மெல்லிய
காற்றுக்கு - காற்றினுக்கு
இடை - (தமயந்தியின்) இடுப்பு
ஆற்றுது - பொறுக்காமல்
தேய்ந்து - தேய்வடைந்து
என்றும் - எப்பொழுதும்
நுடங்கும் - துவளும்,
என்ப - (என்று அவளைக் கண்டவர்) சொல்வர்.

விளக்கம்:— இந்தச் செய்யுளும் அன்னத்தினுடைய வார்த்தைகள். தமயந்தியின் இடுப்பைப் பின்னும் வருணிக்கின்றது.

அன்னம் என்ன சொல்லியது? என்ப என்று சொல்லியது - விதர்ப்ப நாட்டிலுள்ளவர் 'சொல்வார்கள்' என்று சொல்லியது. என்ன என்ப? நுடங்கும் என்ப - துவளும் என்பார். எது நுடங்கும் என்பர் -

இடை. எப்பொழுது இடை நடங்கும்? என்றும் - எப்பொழுதும். என் இடை நடங்கும்? தேய்ந்து - தேய்ந்துபோனதால். எப்படித் தேய்ந்து? ஆற்றுது தேய்ந்து - தாங்க முடியாமல் தேய்ந்து. எதற்கு ஆற்றுது? காற்றுக்கு ஆற்றுது. எப்படிப்பட்ட காற்றுக்கு? சிறு காற்றுக்கு - மெல்லிய காற்றிற்கு. எந்தச் சிறு காற்றுக்கு? வீசும் சிறு காற்றுக்கு. எதனுல் வீசும் சிறு காற்றுக்கு? சிறகால் வீசும் சிறு காற்றுக்கு. எப்படிப்பட்ட சிறகால்? அம்சிறகால் - அழகிய சிறகுகளால். எப்படி வீசும்? ஒன்றிவீசும் - நெருங்கி வீசுகின்ற. அழகிய சிறகினுல் எது நெருங்கி வீசுகின்ற மெல்லிய காற்றிற்குத் தாங்காமல் தமயந்தியினது இடை தேய்ந்துபோய் எப்பொழுதும் துவளும் என்று சொல்வார்கள்? பறவை - வண்டுகள். எப்படிப்பட்ட வண்டுகள்? சிறு பறவை. எவைகளையுடைய சிறுபறவை? கால் சிறு பறவை - கால்களையுடைய சிறு வண்டுகள். எத்தனை கால்களை உடையவை? அறுகால் சிறு பறவை - ஆறு கால்களையுடைய சிறிய வண்டுகள். இந்த விஷயத்தை அன்னம் நளனை என்னவென்று அழைத்துச் சொல்லியது? வேந்தே - அரசனே, என்று அழைத்துச் சொல்லியது. என்ன வேந்தே? நின்ற வேந்தே - தங்கிய அரசனே. எது தங்கிய வேந்தே? நிழல் தங்கிய அரசனே. எதனுடைய நிழல்? கவிகை நிழல் - குடையினது நிழல். எங்கே நிழல் தங்கிய வேந்தனே? உலகும் - உலகங்களிலும். எத்தனை உலகங்களிலும்? ஏழு உலகும் - ஏழு உலகங்களிலும். (அதாவது, எல்லா உலகங்களையும் உனது அருளினுல் காக்கின்ற வேந்தே, என்பது பொருள்.)

விரிவுரை:-முலையின் பாரத்தைத் தாங்கமாட்டாமல் இடை ஒடியுமெனச் சிலம்புகள் கதறுமென்று, அன்னம் முன் சொன்னதைக் கேட்டு நளன் அப்பறவையின் சொற்றிறத்தைக் கருதி மெல்லச்சிரித்திருப்பான். சிரிக்கவும் தான் சொல்லியதை நளன் நம்பவில்லை என்று அன்னம் சிறிது சினம்கொண்டு, மீண்டு மிங்கு அவ்வுரையை வற்புறுத்தமுயன்று இடை சிறியதாய்ப் போனதற்கு ஒரு காரணமும் கற்பித்துக் கூறுகின்றதுபோலும். சிலம்புகள் புலம்புதல் பொய்யென்பது வெளிப்படை. அதைக் கேட்கின்ற நளனுக்கும் பொய் யென்று தெரியும், சொல்கின்ற அன்னத்திற்கும் பொய் யென்று நன்றாகத் தெரியும். ஆனுல் பொய்யென்று தெரிந்தவொன்றை ஒருவன் சொல்லவரும்போது, அதுவும் கேட்கின்றவனுக்குச் சிறிது சந்தேகமும் இருப்பதாகத் தோன்றினுல், விஷயத்தை மாத்திரம் சொல்லி நிறுத்தாமல், கேட்டவன் தடுத்துப் பேசாமலிருந்தாற் கூடத் தானுகவே, காரணமும் ஒன்று சேர்த்துக் கொள்வதும், பலரறிந்த விஷயம் அதுஎன்றுசாட்சிகள் இருப்பதாகச் செப்புவதும் இயல்பு. உதாரணமாக, கடன்படாதவன் ஒருவனை ஏதேனும் ஓர் சந்தர்ப்பத்தில் 'உனக்குக் கடன் உண்டோ' என்று கேட்கநேர்ந்தால், இவன், 'இல்லை' என்று பதில் சொல்லிவிட்டுச் சும்மா இருந்துவிடுவான். தலைக்குமேல் கடன் இருப்பவன் ஒருவன், எந்தச் சந்தர்ப்பத்திலாவது தனக்குக் கடனில்லை என்று காட்டிக்கொள்வது அவசியமென்று ஏற்பட்டால், கேட்பதற்கு முன்னமேயேகூட, "எனக்குக் கடன் இல்லை......இல்லவே இல்லை..........எப்பொழுதும் இருந்ததில்லை......நான் தலைபோனுலும் கடன்வாங்கவே மாட்டேன்......நான் ஏன் வாங்கவேண்டும், வரும்படிக்குமேல் ஒரு தம்படிகூடச் செலவு செய்கின்ற இடம்பம் எனக்கு வழக்கமில்லை......என்னைத் தெரிந்தவர்கள் யாரைக் கேட்டுப்பார்த்தாலும் எனக்குக் கடனே இல்லையென்று சொல்வார்கள்... சீ! சீ! கடன்கூட வாங்குவார்களா, மானமென்பது இருக்கின்றவர்கள்!" என்று இன்னபடியெல்லாம் பொய்யோடு பொய் அடுக்கிக்கொண்டுபோவது அனுபவபூர்வமாய்க்காணலாம். முன்னையசெய்யுளில் நம்பத்தகாதபடி அவளிடைப்புச் சிறியதாயிருந்ததென்றதற்கு இச்செய்யுளில் அன்னம், தேய்ந்தது ஏன் எனக் காரணம் சொல்வதும், மற்றவரை அதற்குச் சாட்சியாக்குவதும் இந்த அனுபவத்திற்கு இணங்கி இருக்கின்றது.

---

24. செங்தேன் மொழியாள் செறியளக பந்தியின்கீ
ழிந்து முறியென் றியம்புவார்—வந்தென்றும்
பூவாளி வேந்தன் பொருவெஞ் சிலைசார்த்தி
யேவாளி தீட்டு மிடம்.

பதப்பிரிவு:—செம் தேன் மொழியாள் செறி அளகம் பந்தியின்கீழ் இந்து முறி என்று இயம்புவார் வந்து என்றும் பூ வாளி வேந்தன் பொரு வெம் சிலை சார்த்தி ஏ வாளி தீட்டும் இடம்.

அன்வயம்:—பூவாளி வேந்தன் என்றும் வந்து பொருவெம்சிலை சார்த்தி ஏவாளி தீட்டும் இடம், செம்தேன் மொழியாள் செறிஅளக பந்தியின்கீழ் இந்து முறி என்று இயம்புவார்.

பதவுரை.

பூ - மலர்களை
வாளி - அம்புகளாக உடைய
வேந்தன் - அரசனுகிய மன்மதன்,
என்றும் - தினந்தோறும்
வந்து - வந்து
பொரு - போர் செய்கின்ற
வெம் - கொடிய
சிலை - (தனது) வில்லை
சார்த்தி - சார்த்திவிட்டு
ஏ வாளி - தனது பாணங்களை
தீட்டும் - தீட்டுகின்ற
இடம் - இடமாகிய நெற்றியை,
செம் - சிவந்த
தேன் - தேன்போன்று இனிய
மொழியாள் - மொழியையுடைய தமயந்தியின்
செறி - அடர்ந்த
அளகம் - கூந்தலது
பந்தியின்கீழ் - வரிசைக்குக்கீழ் (இருக்கிற)
இந்து - சந்திரனது
முறி - துண்டமே
என்று - என்று
இயம்புவார்-(அவளைக் கண்டவர்) சொல்லுவார்.

கருத்து:—இதுவும் அன்னத்தின் வாக்கு. மன்மதனது வில்போன்று வளைந்த புருவங்களுடன் கூடிக் கூந்தற்சுழல் புரளத் திகழும் பிறைச்சந்திரன் அனைய அவளது நெற்றி கண்டார்க்குக் காமம் விளைக்கும் தன்மையது.

விளக்கம்:—இயம்புவார் - சொல்லுவார். எதை இயம்புவார்? இடம் - இடத்தை. இடத்தை என்ன என்று இயம்புவார்? முறி என்று இயம்புவார் -

துண்டு என்று சொல்லுவார். எந்த இடத்தை ? தீட்டும் இடம் - தீட்டுகின்ற இடத்தை. எதைத் தீட்டும் இடம்? ஏவாளி தீட்டும் இடம் - அம்புகளைத் தீட்டும் இடத்தை. யார் ஏவாளி தீட்டும் இடம்? வேந்தன். எதை உடைய வேந்தன்? வாளி வேந்தன் - அம்புகளையுடைய அரசன். என்ன வாளி? பூவாளி- புஷ்பங்களாகிய அம்புகள். பூவாளி வேந்தன் ஏவாளி தீட்டுவதன்முன் என்ன செய்துவிட்டுத் தீட்டுவான்? சார்த்தி - சார்த்திவிட்டு. எதைச் சார்த்திவிட்டு? சிலை- வில்லை. எப்படிப்பட்ட வில்? வெம் சிலை - கொடிய வில். என்ன செய்கின்ற வெம் சிலை? பொரு வெம் சிலை - போர் செய்வதற்கு உரிய கொடியவில். என்ன செய்து இக்காரியம் செய்வான்? வந்து. எப்பொழுது? என்றும் வந்து - தினந்தோறம் வந்து. பூவாளி வேந்தன் என்றும் வந்து பொரு வெம் சிலை சார்த்தி ஏவாளி தீட்டும் இடத்தை என்ன என்று இயம்புவார்? புஷ்பங்களைப் பாணமாகவுடைய அரசனாகிய மன்மதன் தினந்தோறம் வந்து தனது போர் செய்வதற்குரிய கொடிய வில்லைச் சார்த்திவிட்டுத் தன் பாணங்களைத் தீட்டுகின்ற இடத்தை முறி (துண்டு) என்று இயம்புவார். எதன் முறி? இந்துமுறி - சந்திரனது துண்டு. எங்கே இருக்கின்ற இந்துமுறி? பந்தியின்கீழ் (இருக்கின்ற) இந்துமுறி - வரிசையின் கீழ் இருக்கின்ற சந்திரனது துண்டு. எதன் பந்தி? அளக பந்தி - கூந்தல் வரிசை. எப்படிப்பட்ட அளகம் அது? செறி அளகம் - அடர்ந்த கூந்தல். யாருடைய செறி அளகபந்தி? மொழியாள் - வார்த்தைகளையுடையவளது. எதுபோன்ற மொழியாள். தேன் போன்ற வார்த்தைகளையுடையவள். எப்படிப்பட்ட தேன் ? செம்தேன் - சிவந்த தேன்.

விரிவுரை:—காதலுற்றவர் மனத்தில் மேன்மேலும் ஆசையை விளைக்கின்ற மன்மதன்கையில் தாங்கியவில் கரும்பு, எய்யும் அம்பும் அரும்பு. பூவாளி வேந்தன் என்னும் அந்தத்தொடர் ஆதலின் பூவை அம்புகளாக உடைய அரசன் என்று பொருள்பட்டு மன்மதனைக் குறிக்கின்றது. அவன், தான் காமபாணத்தை எய்வதற்கு முன்னால்அதைத் தீட்டுகின்ற இடம்தமயந்தியின் நெற்றியாம். இப்படிச் சொல்வதன் கருத்து என்ன? தமயந்தியின்நெற்றியினது அழகால் அதைக்கண்டவர் கண்டவளவிலே காமமயக்கம் அடைவார்கள் என்பதாம். வில்லாள் ஒருவன் அம்பைத் தீட்டுமுன் தன்வில்லைச் சார்த்தி வைக்கவேண்டும். இங்குமன்மதனும்அவ்வாறே செய்கின்றான். அந்த வில்தான் தமயந்தியின் புருவம். வளைந்திருக்கின்ற தன்மையால் வில் மாதர்களது புருவத்திற்கு உவமையாகின்றது. இந்துமுறி என்பது இச்செய்யுளில் நெற்றியைக் குறிக்கின்றது. சந்திரனது ஒரு துண்டைப்போலப் பிறைச்சந்திரன் இருப்பதால். பிறைச்சந்திரன் போன்ற நெற்றி யென்னும் இந்துமுறி என்பது உவமை ஆகு பெயராய் நெற்றியை உணர்த்தியது. அளகம், என்றால், கூந்தல், பந்தி யென்றால் வரிசை, அளகபந்தி யென்றது இங்கு நெற்றியின் மீது புரள்கின்ற சிறு குழற்சுருள். ஏ, வாளி,என்னும் இரண்டு சொற்களும் அம்பு என்னும் ஓரே பொருளை உணர்த்தி நிற்கின்றன.

---

25. அன்னமே நீயுரைத்த வன்னத்தை யென்னாவி
யுன்னவே சோரு முனக்கவளோ—டென்ன
அடைவென்றான் மற்றந்த வன்னத்தை முன்னே
நடைவென்றா டன்பா னயந்து.

பதப்பிரிவு:—அன்னமே நீ உரைத்த அன்னத்தை என் ஆவி உன்னவே சோரும் உனக்கு அவளோடு என்ன அடைவு என்றான் மற்று அந்த அன்னத்தை முன்னே நடை வென்றாள்தன்பால் நயந்து.

அன்வயம்:—அந்த அன்னத்தை முன்னே நடை வென்றாள்தன்பால் நயந்து, "அன்னமே, நீ உரைத்த அன்னத்தை உன்னவே என் ஆவி சோரும்; மற்று, அவளோடு உனக்கு என்ன அடைவு" என்றான்.

கருத்து:—தமயந்தியின்மீது மிகுந்த காதல்கொண்ட நளன், அன்னமே, உனக்கு அவளோடு என்ன சம்பந்தம், என்று வினவினான்.

பதவுரை.

அந்த - அந்த
அன்னத்தை - அன்னத்தை
முன்னே - முதலிலே,
நடை - நடையில் [னிடத்தில்
வென்றாள்தன்பால்-வென்றவளாகிய தமயந்தியி
நயந்து - ஆசைகொண்டு,
அன்னமே - ஓ அன்னமே
நீ - நீ
உரைத்த - சொன்ன
அன்னத்தை - அன்னம்போன்ற தமயந்தியை
உன்னவே - நினைத்தமாத்திரத்தில்
என் - என்னுடைய
ஆவி - உயிரானது
சோரும் - (அவளைப் பெறவேனோ யாதோ என்னும் ஐயத்தால்) தளர்ந்துபோகின்றது.
மற்று - அது கிடக்கட்டும்,
அவளோடு - அந்தத் தமயந்தியோடு
உனக்கு - உனக்கு
என்ன அடைவு - என்ன சம்பந்தம், [டான்.
என்றான்—என்று (நளன் அன்னத்தைக்) கேட்

விரிவுரை:—இனி இந்த அன்னத்தைக்கொண்டே தமயந்தியைத் தான் அடையவேண்டுமென்று நளன் நினைத்து, இவ் வன்னம்சொல்வதை அவள் கேட்பாளோ என்னவோ, இதற்கு அவளிடத்தில் செல்வாக்கு இருக்கின்றதோ் இல்லையோ என்னும் சந்தேகம் கொண்டவனாய், 'உனக்கும் அவளுக்கும் என்ன சம்பந்தம் ?' என்று விசாரிக்கின்றான். (அடைவு - அடைதல் - சேர்தல் - சம்பந்தம்).

---

26. பூமனைவாய் வாழ்கின்ற புட்குலங்கள் யாமவடன்
மாமனைவாய் வாழு மயிற்குலங்கள்—காமன்
படைகற்பான் வந்தடைந்தான் பைந்தொடியாள்
நடைகற்பான் வந்தடைந்தே நாம். [பாத

பதப்பிரிவு:— பூ மனைவாய் வாழ்கின்ற புள் குலங்கள் யாம் அவள்தன் மா மனைவாய் வாழும் மயில் குலங்கள் காமன் படை கற்பான் வந்து அடைந்தான் பசுமைதொடியாள் பாத நடை கற்பான் வந்து அடைந்தேம் நாம்.

அன்வயம் :—காமன் படைகற்பான் வந்து அடைந்தான். பூமனைவாய் வாழ்கின்ற புள்குலங்கள் யாம், அவள்தன் மாமனைவாய் வாழும் மயிற்குலங்கள், (ஆகிய) நாம் பைந்தொடியாள் பாத நடைகற்பான் வந்து அடைந்தேம்.

பதவுரை.

காமன் - மன்மதன்,
படை - ஆயுதப்பயிற்சி

கற்பான் - கற்பதற்காக
வந்து - (தமயந்தியினிடம்) வந்து
அடைந்தான் - சேர்ந்தான்.
பூ - தாமரைப் பூவாகிய
மனேவாய் - வீட்டில்
வாழ்கின்ற - வசிக்கின்ற
புள்குலங்கள் - பக்ஷிசாதியாகிய
யாம் - நாங்கள்,
அவள் - அவளுடைய
மா - சிறந்த
மனேவாய் - மாளிகையில்
வாழும் - வசிக்கின்ற
மயில் குலம் - மயில் கூட்டங்கள்,
நாம் - (ஆகிய) நாங்கள் இருவகையினேரும்,
பை - பசுமையான
தொடியாள்- வளேயல்களே யணிந்த தமயந்தியின்
பாத - பாதங்களின்
நடை - நடையினது அழகை
கற்பான் - கற்றுப்பழகுவதற்கு
வந்து - (அவளிடம்) வந்து
அடைந்தேம் - சேர்ந்திருக்கின்ருேம்.

கருத்து:—"காமம் விளேக்கின்ற தன் தொழிலே மன்மதன் இவளது கண்களிலிருந்து கற்றுக்கொண்டு போக வந்திருப்பது போலவே, பூவிலே வாசஞ்செய்கின்ற அன்னங்களாகிய நாங்கள் அம்மலரை விட்டு அவள் மனேக்கு வந்து அங்கிருக்கின்ற மயில்களுடன் சேர்ந்து தமயந்தியின் நடையைக் கற்றுக்கொள்ள இருக்கின்ருேம். இதுவே எனக்கும் அவளுக்கும் இருக்கின்ற தொடர்பு" என்று, அன்னம் நளனுக்கு மறுமொழி கூறியது.

விரிவுரை:—மாதர்தம் கூரிய பார்வையால் ஆடவர் அகம்பிளந்து நோக்கக் காமம்விளேவது இயல்பென்றுணர்ந்து காமத்தை விளேக்கின்ற தொழிலுடைய மன்மதன், அவள் எவ்வாறு நோக்குகின்ருளோ அவ்வாறு தானும் தனது பாணங்களே எய்வதற்குக் கற்பதற்காக அவள்வீட்டில் எப்பொழுதும் காத்துக் கிடக்கின்ருனும். அது போலவே இவ் வன்னமும் அவளுடைய நடையைக் கற்க அங்குத் தங்கி யுள்ளதாம். அன்னமும் மயிலும் நடையினது அழகிற் சிறந்தன. அவைகளே இவளிடத்தில் பாடம் கற்க வந்தனவென்ருல் இவள் நடையின் அழகு மிகுதி என்று தெரிகின்றது. இதுவரையில் தமயந்தியின் நடையழகை வருணிக்காத அன்னம், நளனது கேள்விக்குப் பதில்சொல்லும் வாயிலாக இங்கு அதையும் கூறியது.

குறிப்பு:—1. மனேவாய், என்பதிலுள்ள வாய் இடத்தைக்காட்டவந்த உருபு. இப்படியே, கண் தலே புறம் அகம், என்ற மனிதர்களுடைய உறுப்புக்களின் பெயர்கள், அவ்வுறுப்புக்களேக் குறிக்காமல் மற்றப் பதங்களோடு சேர்ந்து இடத்தைக் காட்டும். [மனேவாய் - வீட்டினிடத்தில்- நகர்க்கண் - நகரத்தினிடத்தில். பொழில்தலே - சோலேயினிடத்தில், ஊர்ப்புறம் - ஊரினிடத்தில். பொழில்அகம்-சோலேயினிடத்தில்.]

2. படைகற்பான், நடைகற்பான், என்ற இவை பார்ப்பதற்கு வினேமுற்று மாதிரி இருந்தாலும் அவை வினேமுற்று அல்ல. இவை இங்கு வினே எச்சங்கள். (முன், 65-வது பக்கத்தில் வினேயெச்சத்தின் இலக்கணம் கூறப்பட்டிருக்கின்றது. அதை இங்கு ஒருமுறை பார்த்துக்கொள்ளவும்). செய்ய செய்து என்பதைப் போலவே செய்வான் என்ற ஒரு உருவமும் வினேயெச்சத்திற்கு உண்டு. அர்த்தத்தை ஒட்டி அதுவே வினேமுற்ருகவும் இருக்கலாம். 'இந்தத் தச்சன் பெட்டி செய்வான்', என்பதில் செய்வான் என்றசொல் தன்வரையிலேயே அர்த்தம் முடிவதால் அது வினேமுற்று. 'அரசன் போர்செய்வான் எழுந்தனன்' என்றதில், செய்வான் என்னும் சொல்லானது போர்செய்ய என்னும் பொருளில் வந்து, அரசன் போர்செய்ய (அதாவது செய்யும்பொருட்டு) எழுந்தனன்' என்ற கருத்தைக் காட்டுகின்றது. செய்வான், என்பது தன் வரையில் அர்த்தம் பூர்த்தியாகாமல், எழுந்தனன் என்னும் வினேமுற்றைக் கொண்டு முடிகின்றபடியால் அது இந்த இடத்தில் வினேயெச்சமாகும். அதேவிதமாக இந்தச்செய்யுளில், காமன் படைகற்பான் வந்து அடைந்தான், 'நடைகற்பான் வந்து அடைந்தேம்' என்ற இடங்களிலும் கற்பான், என்பன கற்பதற்கு என்ற அர்த்தத்தில் நின்று, வந்து என்னும் இன்னெரு வினேயெச்சத்தைக்கொண்டு முடிகின்ற வினேயெச்சங்கள். இந்தப் பிள்ளே தன் பாடத்தைக் கற்பான், இங்கே வினேமுற்று. பாடம் கற்பான் பள்ளிக்குச் சென்றேன்—வினேயெச்சம்.

# அப்பர்

## அப்பரும் அறுபத்துநான்கு கலேகளும்—29. தருக்கம்

[151-வது பக்கத் தொடர்ச்சி]

### (X) பிரமாணத்தின் வகுப்புக்கள்

### 2. அநுமானப் பிரமாணம்

(a) அநுமானமாவது யாது?

அநுமானமாவது குறி ஆராய்ச்சியின் முடிவு. இதை வடநூலில் இலிங்கப்பராமரிசம் என்பர். இந்த இலிங்கப் பராமரிசத்தால் பொருள் அநுமிக்கப்படும். ஆதலின் அநுமானம், அறிந்த பொருள்களேப்பற்றிய ஞானத்தால் உண்டாவது. புகையைக் கண்டவிடத்து நெருப்பு உண்டென்பது அநுமானம். அநுமிதியைக் குறித்துக் காரணமாதலின், தீ முதலிய ஞானம் அநுமதியாம். அதன் காரணம் புகை முதலிய ஞானம்.

வியாப்தி, நிச்சயத்தால் பொருளே யுணர்த்துவது- இலிங்கம். புகை தீக்கு இலிங்கமெனப்படும். அர்ச்சாவதார மூர்த்தங்களின்று ஆங்காங்கு அருள் வெளிப்படுதல் பரம்பொருளின் எங்கும்நிறைந்த பேரன்புக்கு இலிங்கங்களா மன்றே?

குறிக ளுமடை யாளமுங் கோயிலும்
நெறிக ளுமவர் நின்றதோர் நேர்மையும்
அறிய வாயிர மாரண மோதிலும்
பொறியி லீர்மன மென்கொல் புகாததே.

தனிக்குறுந்தொகை 6.

யாண்டுப்புகை ஆண்டுத் தீ, என்னும் உடனிகழ்ச்சி நியமத்திற்கு வியாப்தி என்னும் பெயர். வியாப்தி கிரகிக்கப்பட்டாற்றான் புகை தீயையுணர்த்தும் ஆதலின் வியாப்தி நிச்சயத்தால் தீ அநுமாபகமாதலின், புகை தீக்கு இலிங்கம்.

["அநுமாபகம்" என்பது அநுமிதியை உண்டு பண்ணுவது]

"குண்டரே சமணர் புத்தர் குறியறியாது நின்று கண்டதே கருது வார்கள்" என்னும் அப்பர் திருவாக்கை நோக்குக.

புகையினது மூன்றும் ஞானம் இலிங்கபராமரிசம், (S is P because of M) முன்னே போனகச்சாலையில் புகைகண்டு தீயைக் காணுகின்றான். அதை மறித்துங் கண்டபோது தீக்குத் தன்னியல்பான சம்பந்தம், ஈரமுள்ள கட்டைகளால் இயற்கையில் எங்கும் காணப்படுகின்ற சம்பந்தத்தை நினைவூட்டி, யாண்டுப் புகை ஆண்டுத் தீ யென்று துணியாநின்றான்.

இவ்வாறு இயற்கையில் ஒரு பொருளின் இயற்கைச் சம்பந்தமின்றி வேறுவகைச் சம்பந்தங்களும் உள. அவற்றை உபாதிசம்பந்த மென்பர். புகைக்கும் தீக்கும் உள்ள சம்பந்தம் உபாதிசம்பந்த மல்ல. ஈர விறகின் கூட்டம் உபாதியென்று எண்ணலாமன்றி, அவ்விறகினின்றெழும் தீக்குப் புகை உபாதியென்று தர்க்கநூலில் அங்கீகரிக்கப்படவில்லை. விறகின் தீயை அப்பர் உதாரணப்படுத்துவது காண்க:—

விறகிற் றீயினன் பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோனட் டுணர்வு கயிற்றினான்
முறுக வாங்கிக் கடையமுன் னிற்குமே.

தனித்திருக் குறுந்தொகை 10.

உபாதியிற் சேராது தன்னியற்கையில் சம்பந்தப்பட்டதை வியாத்தி என்று தர்க்கம் கூறும்.

எனவே, புகைதீக்களது வியாத்தியானது கிரகிக்கப்படுகையில், பாகசாலைப் புகைஞானம் முதல்ஞானமாம். மலைமுதலிய பக்கத்தில் புகைஞானம் இரண்டாவதாம் பிறகு, முன்கிரகிக்கப்பட்டதாகிய, யாண்டுப் புகைஆண்டுத் தீ,யெனப் புகைதீக்களது வியாத்தியை நினைத்து அம்மலையின்கண்ணே, பின்னர்ப் புகையைப் பராமரிசிக்கின்றான். இவ்வாறு ஆராய்ந்தவன் இந்த மலையில் தீயால் வியாத்தமான புகை உண்டென்று மூன்றும்ஞானம் பெறுகின்றான். இவ்வந்தஸ்துக்களைக் குறிப்பதுபோல் திருநாவுக்கரசரும்,

மூவகை மூவர்போலும் முற்றுமா நெற்றிக் கண்ணர்
நாவகை நாவர் போலும் நான்மறை ஞால மெல்லாம்
ஆவகை யாவர் போலும் ஆதிரை நாளர் போலும்
தேவர்க டேவர் போலும் திருப்பயிற் றார னாரே.

திருப்பயிற்றூர் - திருநேரிசை 5.

இவ்வாறுமூன்றாவது அந்தஸ்தான ஞானமேவேண்டப்படும் இலிங்க ஆராய்ச்சியின் ஞானமாம். இவ்விலிங்க பராமரிசம் அநுமிதியைக் குறித்துக் கரணமாதலின் அநுமானம். அதனால் இம்மலையின்கண் தீயுண்டென்று அநுமதிஞானந் தோன்றும். இங்ஙனம் முறைபிறழாது அறிவு வளரும் வளர்ச்சியைக் கீழ் வரும் திருப்பாசுரம் குறிப்பிடுவது காண்க:—

நெறிநீர்மையார் நீள்வானவர் நினையுந்நினை வாகி
அறிநீர்மையி லெய்தும்மவர்க் கறியும்மறி வருளிக்
குறிநீர்மையர் குணமார்தரு மணமார்தரு குன்றில்
எறிநீர்வயல் புடைசூழ்தரு மிடும்பாவன மிதுவே.

சம்பந்தர்

மேற்கண்ட மூன்றும் ஞானம் அறியவியலாத வியாத்தியுடையவனுக்கும், கிரகித்துப் பின்னர் மறந்த ஒருவனுக்குமே, அநுமானம்பிறவாது நிற்கும். அக்காலத்திலே இம்மூவகை ஞானமும் முறையே எழும். அங்ஙனமின்றி அறிந்த வியாத்தியானுக்கு இக்குறி பிரத்தியட்சநிலையாய் முடிந்துவிடும். அவனுக்கு ஆராய்ச்சி வேண்டுவதேயில்லை. இதை அப்பர்,

மண்ணளந்த மணிவண்ணர் தாமு மற்றை
மறையவனும் வானவருஞ் சூழ நின்று
கண்மலிந்த திருநெற்றி யுடையா ரொற்றைக்
கதநாகங் கையுடையர் காணீ ரன்றே
பண்மலிந்த மொழியவரு மியானு மெல்லாம்
பணிந்திறைஞ்சித் தம்முடைய பின்பின் [செல்ல
மண்மலிந்த வயல்புடைசூழ் மாட வீதி
வலம்புரமே புக்கங்கே மன்னி னாரே.

திருவலம்புரம் - திருத்தாண்டகம் 1.

(b) அனுமானத்தின் வகுப்புக்கள்

அநுமானம்இருவகைப்படும் அவையாவன: சுவார்த்தாநுமானம், பரார்த்தநுமானம்என்பன. தானே சமையலறையிற் கண்ட காட்சியால் புகை தீயால் உண்டாவதென்பது கிரகித்து, மலையருகேசென்று அதன்கண் தீயின் ஐயமுடையனாய் மலையில் நிகழ்வதாய் இடைவிடாத மூலத்ததாய் விண்ணளாவும் புகையின் ஒழுங்கைக் கண்டு, புகை காண்டலா லெழுந்த வாசனை (impression)உடையனாய், யாண்டுப் புகை ஆண்டுத் தீயென்று வியாத்தியை நினையாநின்றான். இவ்வாறு இம்மலையில் தீயுண்டென்று தானே யுணர்தல் சுவார்த்தாநுமான மெனப்படும்.

அண்ட மாரிரு ளூடு கடந்தும்பர்
உண்டு போலுமோ ரொண்சுட ரச்சுடர்
கண்டிங் காரறி வாரறி வாரெலாம்
வெண்டிங் கட்கண்ணி வேதிய னென்பரே.

சித்தத்தொகை - திருக்குறுந்தொகை 2.

என்னும் அப்பர் பாசுரத்தின்கருத்தை நோக்குக.பரார்த்தநுமானமாவது பிறர்பொருட் டநுமானமாம். ஒருவன் தான் புகையினால் தீயை அநுமித்துப் பிறனைக் குறித்துப் போதிக்கும்பொருட்டுப் பஞ்ச அவயவங்களையுடைய அநுமானத் தொடர்மொழி கூறுகின்றான். (Indian Logic Contemplates five premises for a syllogism) முதலில் உதாரணமாய்ச் சர்வசம்மதமான தொன்றை யெடுத்துக் காட்டுகின்றான் (Example of a Universal proposition, Major premises.) யாது யாது புகையுடையதோ அதுவது தீயுடையதென்பான்-போனகச்சாலையின் அநுபவம், இரண்டாவது வாக்கியம் இம்மலையும் புகையுடையது என்பது. இதை உபநய மென்பர் (Minor premises). மூன்றாவது புகையின் உண்மை, ஏது. நான்காவது மலை தீயுடைத்து என்பது, பிரதிஞ்ஞை; இவ்வாறு உதாரணம், உபநயம், ஏது, பிரதிஞ்ஞைகளால்வரும் முடிவு ஐந்தாவதாகிய நிகமனம், இம்மலை நெருப்புடையதென்னும் தீர்மானம். இவ்வாறு உணர்த்தல் பிறர்பொருட்டு அநுமானமாகிய

பரார்த்தாநுமானமாம். யாக்கை நிலையாமையும்,மூப்பு சாக்காடு வருவதும், அவற்றிற்குக் காப்பும் அப்பர் இம்முறைகளிற் காட்டுவது காண்க.

மூப்பி னோடு முனிவுறுத் தெந்தமை
யாப்ப தன்முன் னணியம ரர்க்கிறை
காப்ப தாய கடிபொழி லேகம்பம்
சேர்ப்ப தாகநாஞ் சென்றடைந் துய்துமே.

திருவேகம்பம்-திருக்குறுந்தொகை 7.

தருமந் தான்றவத் தான்றவத் தால்வருங்
கருமந் தான்கரு மாமறிக் கையினன்
அருமந் தன்ன வதிர்கழல் சேர்மினோ
சிரமஞ் சேரழற் றீவினை யாளரே.

சித்தத்தொகை-திருக்குறுந்தொகை 21.

(c) உடன்பாடு எதிர்மறை முறைகள்.

மேற்கண்ட இருவகைபனுமானங்களில் பரார்த்தாநுமானத்தில், பிறனுக்கு இருவகையால் அநுமானங் காட்ட ஏற்பட்ட முறைகள், முறையே உடன்பாடென்றும் எதிர்மறை யென்றும் இருவகை யாகும். (உ - ம்) மலைக்குத் தீயுண்மை சாத்தியம், அதாவது துணிபொருள். புகையுண்மை ஏது. இதுவும், உடன்பாட்டு முறையினும் (அந்நுவபத்தால்) காட்டக்கூடும் எதிர்மறையாலும் (வியதிரேகத்தால்) காட்டக்கூடும். "யாண்டுப் புகை ஆண்டுத் தீ" யென்பதும், அங்ஙனம் "அட்டிலில்" என்பதும் அந்நுவயமெனப்படும் உடன்பாட்டு முறை. அவ்வாறின்றி "யாண்டுத் தீயில்லை, ஆண்டுப் புகையில்லை" என்பதும் அதற்கு ஏதுவாய் மடுவில் (தீயில்லை) என்பதும் எதிர்மறை முறையாம். இதன்படி, அப்பர் சிவபெருமானைச் சிந்தித்த விடத்து இன்பம் வந்தெய்து மென்பதும், நோய் முதலிய துன்பங்கள் இல்லை யென்பதும் கீழ்வரும் பாசுரங்களில் நிரூபிப்பது காண்க :—

(அந்நுவயி)

சங்கு லாமுன்கைத் தையலோர் பாகத்தன்
வெங்கு லாமத வேழம்வெ குண்டவன்
கொங்கு லாம்பொழிற் கோடிகா வாவென
எங்கி லாததோ ரின்பம்வந் தெய்துமே.

திருக்கோடிகா-திருக்குறுந்தொகை 1.

(வியதிரேகி)

வெம்பு நோயு மிடரும் வெறுமையும்
துன்ப முந்துய ரும்மெனுஞ் சூழ்வினை
கொம்ப னார்பயில் கொண்டீச் சரவனை
யெம்பி ரானெனை வல்லவர்க் கில்லையே.

திருக்கொண்டீச்சரம் - திருக்குறுந்தொகை 6.

எனவே, வியதிரேக வியாப்திக்குக் கிரமம் பின்வருமாறு: அந்நுவயத்தில், சாதனம் (புகை) வியாப்பியம், சாத்தியம் (தீ) வியாபகம்; வியதிரேகத்தில் சாத்திய அபாவம் (அதாவது தீயின்மை) வியாப்பியம் என்பர். சாதநபாவம் (புகையின்மை) வியாபகமாம். வியாப்பிய வியாபகபாவமானது பாவ பதார்த்தங்களுக்கு எங்ஙனம் கூறப்பட்டிருக்கின்றதோ, அங்ஙனமே அபாவ பதார்த்தங்களுக்கு விரோதமாகத்தோன்றும். இக்கிரமத்தைக் கீழ்வரும் அப்பர் பாசுரங்களால் உணர்க:—

மண்ணல்லை விண்ணல்லை வலைய மல்லை
மலையல்லை கடலல்லை வாயு வல்லை
யெண்ணல்லை யெழுத்தல்லை யெரியு மல்லை
யிரவல்லை பகலல்லை யாவு மல்லை
பெண்ணல்லை யாணல்லை பேடு மல்லை
பிறிதல்லை யானாயும் பெரியாய் நீயே
யுண்ணல்லை நல்லார்க்குத் தீயை யல்லை
யுணர்வரிய வொற்றியூ ருடைய கோவே!

திருவொற்றியூர் - திருத்தாண்டகம் 9.

இவ்வாறு சாதன சாத்தியத்தில் அபாவங்காட்டிப் பரம்பொருளின் இனிமையை அந்நுவயத்தில் முடிப்பது பின்வரும் பாசுரத்திலுணர்க:—

திருவேயென் செல்வமே தேனே வானோர்
செழுஞ்சுடரே செழுஞ்சுடர்நற் சோதீ மிக்க
வுருவேயென் னுறவே யென்னூனே யூனின்
னுள்ளமே யுள்ளத்தி னுள்ளே நின்ற
கருவே யென் கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே மணியாடு பாவாய் காவாய்
யருவாய வல்வினைநோ யடையா வண்ண
மாவடுதண் டுறையுறையு மமர ரேறே.

திருவாவடுதுறை-திருத்தாண்டகம் 1.

இவ்வாறு ஈச்வரன், சீவன் சம்பந்தமாய்க் காட்டும் அந்நுவயி வியதிரேகி என்பனவற்றை, கேவல அந்நுவயி என்றும் கேவல வியதிரேகி என்றும் தர்க்க நூல் கூறும். ஏனெனில் ஆன்மா கடவுள் என மொழியும் பதார்த்தங்களுக்கு ஒப்பிடக்கூடிய பொருள்கள் வேறு காணப்படாமையால், ஒருதரப் பட்சமான உடன்பாடு எதிர்மறைகளை அங்கீகரித்து மேல் நடத்தவேண்டிய ஆராய்ச்சிகள் ஒழுங்காக வேண்டியதால், அத்தகைய முறைகளைக் கேவலம் எனக் கூறுவர். அதாவது ஓரோவோரேது; கேவலம் வியதிரேகிக்கு மேல்வரும் முறை நோக்குக:—

ஆன்மாவோடு கூடிய தன்மையாகிய "சான்மகத்துவம்" சாதிக்கையில் பிராணாதி யுடைமையை ஏதுவாகப்பெறும். சீவ சரீரம் சான்மகம், அதாவது ஆன்மாவோடு கூடியது— பிராணாதி யுடைமையின். யாது சான்மகமன்று அது பிராணாதி யுடைமைய தன்று. குடம் சீவசரீரம்போல் பிராணாதியுடையதன்று, ஆதலின் சான்மகமன்று என்பர்.

இதில் சீவசரீரம் பட்சம். சீவசரீரத்தினது சான்மகத்துவம் சாத்தியம் (முடிக்கப்படுவது); பிராணாதி யுடைமை ஏது. இது கேவல வியதிரேகி. ஏனெனில் உடன்பாட்டில் வியாத்தி யின்மையாலும் சான்மக மென்பது பிராணாதியுடையது என்று வேறு திருஷ்டாந்த மின்மையாலும் சர்வ சீவசரீரமும் பக்கமே யாவதாலும் இது எதிர்மறை தொக்கிய கேவல வியதிரேகியாம்.

தந்தைதா யில்லாதாய் நீயே யென்றும்
தலையார் கயிலாய னீயே யென்றும்
யெந்தாயெம் பிரானானாய் நீயே யென்றும்
ஏகம்பத் தென்னீச னீயே யென்றும்
முந்திய முக்கணாய் நீயே யென்றும்
மூவலூர் மேவினாய் நீயே யென்றும்
சிந்தையாய் தேனூராய் நீயே யென்று
நின்றநெய்த் தானாவென் னெஞ்சு ளாயே.

திருநெய்த்தானம் திருத்தாண்டகம் 9.

எனச் சீவர்களையே, சரீரமாயுள்ள சிவ சொரூப வர்ணனையாலு முணர்க.

இலக்கணமும் கேவல வியதிரேகிக்கு ஏதுவாகும். பிரமாண இலக்கணமாகிய பிரமாண கரணத்துவமும் அவ்வாறே ஏதுவாகும்.

வேறொரு ஏது காட்டக்கூடுமாயின் அது கேவலாந்நுவயிஎன்பர். விசேஷம்என்பது பெயரிட்டு வழங்கத்தக்கதும் அளவையா லளக்கற்பாலதுமாம். இவற்றை முறையே வடநூலார் அபிதேயம், பிரமேயம், என்பர். விசேடத்திற்கு அபிதேயத்துவம் சாத்தியம்; பிரமேயத்துவம் ஏது. யாது அபிதேயமாகாதோ, அது பிரமேயமு மாகாது. ஆயினும் வியதிரேக திருஷ்டாந்தமில்லை. எவ்விடத்தும் பிரமாணிகப்பொருளே அதாவது பிரமாணத்தாற் பெறப்பட்ட பதார்த்தமே திருஷ்டாந்தம். அதுவும் பிரமேயமும் அபிதேயமுமாம். எனவே கேவலாந்நுவயி முழுதும்அபாவத்திற்குஎதிர் மறையாகாமை வெளிப்படை.

சிவன் யுக்தயோகி, சீவன் யுஞ்ஞானயோகி. எவனுக்குஎப்போதும் ஏகரசமாய்ச் சர்வபதார்த்தங்களும் பிரத்தியட்சமாய் விளங்குகின்றனவோ அவனே யுக்தயோகி என்பர். சிந்தனை செய்வதால் பதார்த்த ஞானமுண்டாகின்றவனுக்கு யுஞ்ஞானயோகி என்றுபெயர். யுக்த யோகிக்கு அபிதேயமாகாததும் பிரமேயமாகாததும் யாண்டுமில்லை. ஆதலால் எதன் அபாவம் ஒரிடத்துமிருப்பதின்றோ அதுதான் கேவலாந்நுவயி எனப்படும்.

நாதனு யுலக மெல்லா நம்பிரா னெனவு நின்ற
பாதனும் பரம்யோகி பலபல திறத்தி னாலும்
பேதனுத் தோன்றினனெப்பெருவேளூர் பேணினனை
யோதநா வுடைய னாகி யுரைக்குமா றுரைக்கின்றேனே.

திருப்பெருவேளூர் - திருநேரிசை 2.

ஆதியு மறிவு மாகி யறிவினுட் செறிவு மாகிச்
சோதியுட் சுடரு மாகித் தூநெறிக் கொருவ னாகிப்
பாதியிற் பெண்ணு மாகிப் பரவுவார் பங்கனாகி
வேதியர் வாழுஞ் சேய்ஞல் விரும்புமாப் பாடி யாரே.

திருவாப்பாடி - திருநேரிசை 2.

# ஜூலியஸ் ஸீஸர்

## [ஓர் ஷேக்ஸ்பியர் நாடகம்]

[150-வது பக்கத் தொடர்ச்சி]

### அங்கம் 2. களம் 1.

டெஸியஸ் ப்ரூட்டஸ்:—ஸீஸர் ஒருவனைத் தவிர வேறெவரையுந் தீண்டலாகாதோ ? (1)

காஸ்ஸியஸ்:—டெஸியஸ், நன்று தூண்டினை. ஸீஸரின்நேயம் நனியுடைய மார்க் ஆண்டனி, ஸீஸருக்குப்பின் பிழைத்திருப்பது தக்கதன்றென நினைக்கின்றேன். நுட்பமுடைய சூழ்ச்சியாளனொருவனை அவனில் நாம் காணலாவோம் (2). அவனுக்கிருக்கும் சாதனங்களை, விருத்திசெய்வானாயின், நம்மையெல்லாம் அலைக்குமளவும் அவை எட்டக்கூடும் என்பதை அறிவீர் (3). அதனைத் தடுக்கும் பொருட்டு, ஆண்டனியும் ஸீஸரும் ஒருங்கே வீழ்க.

ப்ரூட்டஸ்:-நம்முடைய வழி இரத்தம் அதிகம்மிகுந்ததாய்த்தோன்றும், கேயஸ் காஸ்ஸியஸ் (4). சிரத்தினை அரிந்துவிட்டுப் பின் கரங்களைப் பிளப்பதோ (5). சாவிற் சீற்றமும், அழுக்காறு அப்புறமும் அமைந்தாற்போலும் (6). ஸீஸரின் ஒரு அவயவந்தானே ஆண்டனி. நாம் கசாயிகளன்றிப் பூசாரிகளேயா யிருப்போம் கேயஸ் (7). நாமெல்லோரும் ஸீஸரின் நோக்கத்தையே எதிர்த்து நிற்கின்றோம்; மனிதர்களுடைய நோக்கத்திலோ இரத்தமில்லை (8). ஆகா! ஆயின், ஸீஸரின் உடலைக் கூறிடாமல் அவன் நோக்கத்தைமட்டும் நாம் எட்டக்கூடியவர்களா யிருக்கலாகாதா! மற்று, ஐயகோ, அதன்பொருட்டு ஸீஸர் இரத்தம் பெருக்கவே

(1) தம் காரியம் கைகூடுவதற்கு ஸீஸரைமாத்திரம் கொன்றால் போதுமோ; அல்லது மற்றுஞ் சிலரையும் கொல்லவேண்டிய அவசியமில்லையோ என்பதுபற்றி டெஸியஸ்ப்ரூட்டஸ் வினவுகின்றான்.

(2) ஆண்டனி மதிநுட்பமும் சூழ்வினைத் திறமும் உடையவன். ஆதலால் அவனை இப்பொழுது சும்மா விட்டுவிடுவோமாயின் பிறகு அவன் நம்மை அல்லல்படுத்துவான்.

(3) மேலும், ஸீஸரின் நண்பன் என்னும் செல்வாக்கு சொல்வன்மை, வினைத்திட்பம் முதலிய சாதனங்கள் இருக்கின்றன. இவைகளை அவன் பலப்படுத்திக்கொள்வானாயின், நம்மையே கூடத் தொந்தரவு செய்யக்கூடியவனாகலாம். அவை - அச்சாதனங்கள்.

(4) காஸ்ஸியஸ் சொல்வதையெல்லாம் மறுப்பதேப்ரூட்டஸின் கடன். இது காஸ்ஸியஸின் மூன்றாந் தோல்வி. ஆணைவைப்பதைப் பற்றியும் ஸிஸிரோவைச் சேர்த்துக்கொள்வதைப் பற்றியும் செய்த முடிவுகளால் கெடுதியில்லையாயினும், ஆண்டனியையும் உடன்கொல்வதைப் பற்றி ப்ருட்டஸ் காஸ்ஸியஸின் வார்த்தையைக் கேளாததே பிறகு இச்சதியாலோசனைக்காரர் நாசமடைந்ததற்குக் காரணமாகின்றது.

(5) ஆண்டனியையுக் கொல்லவேண்டா மென்பதற்கு ப்ரூட்டஸ் கூறுங்காரணங்கள் கவனிக்கத்தக்கன. ஆண்டனியின் மீதுள்ள இரக்கத்தால் அதனைத் தவிர்க்கச் சொல்லவில்லை. இரத்தவெறி பிடித்தவர்கள் என்று தங்களைச் சனங்கள் எண்ணலாகாதென்பதே ப்ரூட்டஸின் கருத்து. மேலும், ஸீஸர் மாண்டபின் ஆண்டனியினால் என்ன செய்யக்கூடும்.

(6) இருவரையும் கொல்வோமானால், பொதுஜன நன்மைக்காக அன்றிக் கோபத்தால் ஸீஸரையும், பிறகு நாம் பெறுகின்ற இலாபத்தில் பங்கு கேட்பானே என்ற பொறாமையால் ஆண்டனியையும் நாம் கொன்றதுபோல் தோன்றும்—என்பது பொருள்.

(7) கசாயி - ஆடுமாடுகளைக்கொன்று மாமிசம் விற்பவன். பூசாரி - ஊரின் நன்மைக்காகத் தெய்வத்திற்குப் பலியிடுபவன். நாம் ஸீஸரைமாத்திரம் கொன்றால்தான் பூசாரிபோல் தோன்றுவோம்; ஆண்டனியையும் கொல்வோமானால் நம்மைக் கசாயிகளென்றே கருதுவார்.

(8) ஸீஸரின்மீது நமக்குப் பகையில்லை. அவன்கொண்ட பேராசைநோக்கத்தைச் சிதைப்பதே நமது கருமம். ஸீஸர் என்ற பேரே, பேராசை என்பதற்குப் பரியாயமாயிருக்கின்றது. ஆகையால் நாம் ஸீஸரைக் கொன்றே

வேண்டும் (9) நயமுடைய நண்பர்காள், கோபமுட னல்லாமல் அவனை நாம் தீரமுடன் கொல்வோம். கடவுளர்க் குரியவொரு நைவேத்தியமென்ன அவ னைப் பாகஞ்செய்வோம்—நாய்களுக் கேற்ற பிண மென்ன அவனைத் துண்டிக்கவேண்டா (10). தந் திரம் மிகுந்த எஜமானர் செய்வதுபோல், நமது இதயங்களும், தம் வேலைக்காரர்கள் மூண்டெழுங் கோபத்தினால் ஒன்று செய்யும்படி தூண்டிவிட்டுப் பிறகு அவர்தமைக் கண்டிப்பதுபோலத் தோன்றட் டும். இதுதான் நம்முடைய காரியத்தை அழுக் காறுடையதன்றி இன்றியமையாத தாக்கும். இன் னபடி இதுதான் பொதுசனங்கள் கண்களுக்குத் தோன்றுதலும், கொலைபாதகர் என்னாது நம்மைப் பரிசுத்திசெய்தவர் என்றழைப்பார். மார்க் ஆண்ட னியோ, அவனைப்பற்றி நினைக்கவேண்டா; ஸீஸ ரின் சிரம் போனபின் ஸீஸரின் கரங்கள் செய்வ தனினும் அதிகமவன் செய்ய வல்லா னல்லன் (12).

காஸ்ஸியஸ்:—எனினும், ஸீஸர்மீது அவன் வைத் துள அவ் வொட்டிய அன்புபற்றி, அவனை யான் அஞ்சுகின்றேன்.

ப்ரூட்டஸ்:—ஐயோ, காஸ்ஸியஸ், அவனைப்பற்றி நினைக்காதே. ஸீஸரை அவன் நேசிப்பானெனின் அவன் செய்யக்கூடியதெல்லாம் தனக்கே—எண் ணிப்பார்த்து ஸீஸருக்காகச் சாவது (13). அவ் வளவு அவன் செய்வதும் அதிகம்; ஏனெனில் விளையாட்டிற்கும் வெறியாட்டிற்கும் உல்லாசக் கூட்டங்களிற்கும் தன்னைக் கொடுத்திருப்பவன் அவன் (14).

ட்ரேபோனியஸ்:—அவனில் அஞ்சுவதற் கொன்று மில்லை; அவன் சாகவேண்டா. அவன் பிழைத்தி ருந்து பின்னர் இதற்கெல்லாம் சிரித்திடுவான் (15).

[கடிகாரம் அடிக்கின்றது]

ப்ரூட்டஸ்:—இரு இரு, மணியை எண்ணு.

காஸ்ஸியஸ்:—கடிகாரம் மூன்றடித்தது.

ட்ரேபோனியஸ்:—நாம் பிரிதற்கு நேரமாயிற்று.

காஸ்ஸியஸ்:—மற்று, ஸீஸர் இன்றைய்தினம் வெளி யில் வருவானோ இல்லையோ என்பது சந்தேகமா யிற்றே. ஏனெனில், பேய்கள் கனவுகள் சடங்கு கள் முதலியவைகளைப்பற்றி அவன் கொண்டிருந்த அபிப்பிராயங்களுக்கு முற்றிலும் மாறாக, சிறிது காலமாய் அவன் மூடநம்பிக்கை யுடையவனாயிருக் கின்றான். தோன்றுமிவ் வுற்பாதங்களும், இவ் விரவின் அசாதாரண பயங்கரமும், அவன் நிமித் தகர்கள்தம் போதனைகளும் அவனைச் சபாமண்ட பத்தினின்றும் நிறுத்திக்கொள்வது மாகலாம்.

டெஸியஸ் ப்ரூட்டஸ்:—அந்தக் கவலை கொள்ளற்க. அவன் எவ்வளவு திட்பமாகத்தா னிருக்கட்டுமே, அதற்குமேலும் நானவனை ஆண்டுவிட முடியும். யூனிக்கார்னை (16) மரத்தினாலும், கரடிகளைக் கண்ணாடியாலும், யானைகளைப் படுகுழிகளாலும், சிங்கங்களை வலைகளாலும், மனிதரை இச்சகர்களா லும் வஞ்சிக்கலாம் என்பதைக் கேட்க விரும்பு வான் அவன். (17) மற்று, இச்சகர்களை வெறுக் கின்றான் அவனென்று யான் உரைக்குமளவில், ஆம் என்று அவன் சொல்வான்—அதனிலேயே மிகவும் முகஸ்துதி செய்யப்பட்டுளுகின்றனன். (18) இந்த வேலைக்கு என்னை விட்டுவிடுங்கள்.

மென்றால் பேராசைக் கொடுமைகளை நாம் போக்கினோம் என்றமட்டில் சனங்கள் எண்ணிக் கொள்வார்களே யொழிய, ஸீஸரின் இரத்தம் சிந்தியதென்பதுகூட ஜனங் களின் நினைவிற்கு வராது.

(9) அவனுடைய நோக்கத்தை நசுக்கவேண்டு் என் பதுமட்டுமே நம் கருத்தாயினும், அவனைக் கொல்வதா லன்றி அந்நோக்கத்தைச் சிதைக்குமாறு இல்லையே என்று ப்ரூட்டஸ் வருந்துவான்போல் பேசுகின்றான்.

(10) இவைகளெல்லாம் ப்ரூட்டஸின் வாய்ச்சாலக்குக் கள். செய்வதோ தீமை, அதற்கு வைக்கின்ற பேரோ பெரியது. இத்தகைய வார்த்தைகளைக் கேட்டுச் சனங்கள் மயங்குவது சகஜம்.

(11) ப்ரூடஸிற்குத் தெரிந்திருக்கின்ற வஞ்சனைக்கும் சூதிற்கும் குறைவில்லை. எனினும், கள்ளங்கபடு அறியாத இவ்வுத்தமன் தன் தேசபக்தியால் மதிகலங்கி இக்கொ டிய காரியத்தைச் செய்துவிட்டான் என்று சிலர் இவன் குணத்தை மதித்துரைக்கத் துணிகின்றனர். இன்னொரு வனுக்குத் தன் வேலைக்காரர்களைக்கொண்டு தீங்குசெய்ய வேண்டுமென்னும் எண்ணமுடைய ஒருவன், 'இது செய் யுங்கள்' என்று நேராகச் சொல்லாமல், அவர்களுக்கு அவன்மீது கோபம் மூண்டெழும்படி செய்வானாயின், அவ்வேலைக்காரர்கள் தாமாகச்சென்று கோபத்தினால் அவனுக்குத் தீங்குசெய்தபின், அப்படி அவர் தீங்கு செய்தது தனக்குச் சம்மதமில்லைபோல் பாசாங்கு செய் கின்ற எஜமானன் தன் வேலைக்காரர்களைக் கண்டித்துத் தண்டிக்கின்ற தந்திரத்திற்கிணங்க, நாமும், மனமின்றி யே ஸீஸரைக் கொன்றவர்போலவும், கொன்றபின் அத ற்கு மிகவும் வருந்துபவர்போலவும் நடிப்போம், என்கின் றான் ப்ரூட்டஸ்.

(12) ஸீஸர் மாண்டபின் ஆண்டனியால் ஒன்றுஞ் செய்ய இயலாது - என்பது பொருள்.

(13) ஸீஸரை அவன் நேசித்திருப்பதால் நம்மை என்ன செய்ய இயலும். ஏதாவது செய்வதெனில் தனக்குத்தான் செய்துகொள்ளலாம். அதாவது, ஸீஸர் இறந்தபின் தான் இருப்பது தகுதியன்றென்பதை எண்ணி அவன் சாக லாம்.

(14) அப்படித்தான் தானே சாகமாட்டுவானோ என்றக் கால், அவ்வளவுகூட அவனால் ஆகாது. ஆழ்ந்த துயரம் ஒன்றும், விளையாட்டுப் புத்தியேயுடைய அவனிடம் தங்கி யிராது.

(15) நிலைத்த ஊக்கம் ஒன்றுமில்லாமல் களியாட்டமே கருத்தாயிருக்கின்ற ஆண்டனிக்கு நாம் அஞ்சவானேன். எல்லாவற்றிற்கும் சிரித்துத் திரிவதுபோல் அவன் இக ஸீஸர் கொலையைப்பற்றியும் பிறகு சிரித்தே தீர்ந்துவிடு வான்—என்பது பொருள்.

(16) யூனிகார்ன், என்பது ஒரு கற்பிதமான மிருகம். குதிரையின் உடலும் மானின் கால்களும் சிங்கத்தின் வாலும், நெற்றியில் ஒற்றைக்கொம்பும் உடைய விலங் கென்று இது கருதப்படுகின்றது. இதனை வேட்டை யாடுகின்ற வேடர்கள், அதற்கெதிர் செல்ல, அது இவர் களைத் துரத்தி வரும்போது ஓடிச்சென்று ஒரு மரத்திற் குப்பின் ஒளிதலும், அவ்விலங்கு அம்மரத்தினை முட்டுவ தால், அதன்கொம்பு மரத்தினுள் பாய்ந்தழுந்திச் சிக்கிக் கொண்டவுடன், வேடர் இதனை எளிதில் கொன்றுவிடுவ துண்டு என்று கூறுவர்.

(17) எத்தகைய மனிதனையும் முகஸ்துதியால் வஞ் சித்துத் தன்வழிப் படுத்திக்கொள்ளலாம் என்பது இதன் கருத்து.

(18) "மனிதரென் றிருப்போரெல்லாம், முகஸ்துதி க்கு ஆளாக, ஸீஸரே நீ ஒருவன்தான் இச்சகர்களை இகழ்ந்து வெறுக்கின்றவன்" என்று நான் புகழ்வேனா யின், ஸீஸர் ஆம் என்று அதற்கு ஒவ்வுவான். "இச்சகம் பாடுகின்றவர்களை வெறுக்கின்றாய்" என்று புகழுமிதுவே ஒரு இச்சகமாவதை ஓராது என் வஞ்சனைக்கு ஆளாகி யான் வேண்டியபடி செய்பவனாவான்—என்பது ட்ரே போனியஸ் உரைத்த நுண்ணிய சூழ்ச்சியின் கருத்து.

அவன்மனம் போனபடியே வளேயவிட்டுச் சபா மண்டபத்திற்குஅவனேக் கொண்டுவருவேன். (19)

காஸ்ஸியஸ்:—ஏன்! அவனை அழைத்தேக நாமெல்லோருமே அங்குப் போவோம்.

ப்ரூட்டஸ்:— எட்டுமணிக்கு: அதனைக் கடக்கலாகாதே?

ஸின்ணு:—அதனைக் கடக்கலாகாது. அவ்வேளையைத் தவறவேண்டா.

மெட்டல்லஸ் ஸிம்பர்:—பாம்பேயைப் பற்றி நன்று பேசியதற்குத் தன்னை வைதானென ஸீஸரின்பால் வன்மங் கொண்டுளன் கேயஸ் லிகேரியஸ். (20) நீங்களொருவரும் ஏனோ இவனை நினைக்கவில்லை.

ப்ரூட்டஸ்:—நல்லது, மெட்டல்லஸ், அவன்வயின் செல்க. என்பால் நல்லன்புடையன்; அவனுக்குக் காரணங்களுங் கூறியிருக்கின்றேன். இங்கு மாத்திரம் அவனை அனுப்பிவிடு; நானவனை உருப்படுத்துவேன். (21)

காஸ்ஸியஸ்:—வைகறைப்பொழுதும் நம்மீது வருகின்றது. ப்ரூட்டஸ், நாங்கள் உன்னைவிட்டகல்வோம். நண்பர்காள், பிரிந்தேகுங்கள்: நீங்கள் உரைத்தவைகளைக் கருத்தில் வைத்து உண்மை உரோமர்களென்பதைக் காட்டிக்கொள்ளுங்கள்.

ப்ரூட்டஸ்:—நன்மைமிகு பெருமக்காள், கிளர்கின்ற களிப்புடனே தோன்றுங்கள். நம் கருத்துக்களை நம்முடைய பார்வைகள் மேற்பூண வேண்டா. (22) தளராத ஊக்கமும் தெரியவரு திட்பமும் உடையராய் உரோம நடிகர்களைப்போல் அதனைத் தாங்குங்கள். (23) உங்களொவ்வொருவருக்கும் வந்தனம் இனி.

[ப்ரூட்டஸ் தவிர ஏனையோர் போகின்றனர்]

பையா, லூஸியஸ்!—ஆழ்ந்து தூங்குகின்றனையோ? அது ஒரு பொருளில்லை. நித்திரையின் திரண்டதொரு தேன்பனியைத் துய்த்திடுக. (24) மனிதரது மனங்களிலே அலைவுறுங் கவலைதான் வரைகின்ற உருவங்களும் பிரமைகளேனும் உனக்கில்லை. ஆதலின் நீ அத்துணை நன்றாக நித்திரைசெய்கின்றாய். (25)

(19) ஸீஸரின் குணங்களை மிகவும்நன்றாக அறிவேனாதலின் அவன்வழியே நான் போவதுபோல் காட்டி அவனை இறுதியில் என் வழிக்குக் கொணர்ந்துவிடுவேன். எப்படியும்அவனை இன்றைக்குச் சபாமண்டபம் கொணர்ந்து சேர்ப்பது என் வேலை—என்பது பொருள்.

(20) கேயஸ் லிகேரியஸ், என்பவனும் உரோமப் பெருமக்களில் ஒருவன். இவன் ஒருசமயம் பாம்பேயைப் புகழ்ந்து ஸீஸரின் முன்னிலையில் பேசினான். அதற்காக ஸீஸர் அவனை வைதனன். தன்னை வைததற்காக இவன் ஸீஸரைப் பகைக்கின்றான். ஆதலின் இவன் நம் சதிக்கொலைக் கட்சியில் சேரக்கூடியவன். அவனை ஏனோ மறந்தீர், என்று ஸிம்பர் வியக்கின்றான்.

(21) கேயஸ் லிகேரியஸைத் தன் கட்சியில் சேர்த்துக் கொள்ள ப்ரூட்டஸ் விரையுமிது ஆழ்ந்து கவனிக்கத் தக்கது. தூயநோக்கமுடன் பரிசுத்தி செய்பவர்களாய்த் தாம் தோன்றவேண்டும் என்பதே தந்திரம். மற்றவெல்லாம் வெறும் பேச்சே. கேயஸ் லிகேரியஸிற்கு அத்தகைய நோக்கமும் தூய்மையும் ஒன்றுமில்லை. ஸீஸரின்பால் அவனுக்கு உள்ள பகைமையே பற்றி அவனைக் கட்சியுள் சேர்த்துக்கொள்ள ப்ரூட்டஸ் ஆவல்கொண்டவனாகின்றான்.

(22) மனத்திலுள்ள குரூரம் முகத்தில் தோன்றாதபடி மறைத்து நடந்துகொள்ளுங்கள்—என்பது பொருள்.

(23) அதனை, என்பது, மனத்திலுள்ள கருத்தைக் குறிக்கின்றது, கபடநாடகம் கைவந்தவர்களாகுங்கள்—என்பது பொருள். இவ்வுரையும் ப்ரூட்டஸின் பெருமையை மறுக்கின்றது.

(24) மனிதரது அமைதிக்காக ஆகாயத்தினின்று இறங்குகின்ற ஓர் தேன்பனி என்ன நித்திரை இங்கு உவமிக்கப்பட்டிருக்கின்றது. உறக்கம் ஓசையின்றி வருவதால் தேன்மாரி என்னுமல் தேன்பனி என்னப்பட்டது.

(25) மற்றவர் போனபின், ப்ரூட்டஸ் தன் ஏவலாளன் லூஸியஸைக் கூப்பிடுதலும் அவன் வாராமையால்ஆழ்ந்த நித்திரையிலிருக்கின்றா னென்பதுணர்ந்து, கவலையுற்று அலையும் தன் நிலையையும், கவலையின்றித் தூங்கும் தன் வேலைக்காரன் நிலையையுஞ்சீர் தூக்கிப் பொறாமைகொண்டவன்போல் இது பேசுகின்றான்.

# கம்பராமாயணம்

## ஆரணிய காண்டம்—3. அகத்தியப் படலம்.

[154-வது பக்கத் தொடர்ச்சி]

பேரெண் ணேதுவெனப் பேசற் கூடுமோ.

இந்திரற் கரசளித்த தயரதன்றன் தனிமைந்தன் அபயமென் றடைந்தவம் முனிவர்களை யினிது நோக்கி,

வேந்தன் வீயவும் யாய்வர மேவவு
மேந்த லெம்பி வருந்தவு மென்னகர்
மாந்தர் வன்றுயர் கூரவும் யான்வனம்
போந்ததென் னுடைப் புண்ணியத் தாலென்றான்

[தயரத மன்னன் இரக்கவும், என் தாயாகிய கைகேசி வரம் கொள்ளவும், பெருமையுடைய என் தம்பி பரதன் வருந்தவும், என் அயோத்திமாநகரச் சனங்கள் கொடிய துன்பத்தையடையவும் நான் காட்டிற்கு வந்த இது என்னுடைய புண்ணியத்தால், என்றான்]

என்று,

சூர றுத்தவ னுஞ்சுடர் நேமியு
மூர றுத்த வொருவனு மோம்பினு
மார றத்தினொ டன்றினின் றாரவர்
வேர றுப்பென் வெருவன்மி னீரென்றான்

[சூரபன்மனை அழித்த சுப்பிரமணியனும், ஒளி பொருந்திய சக்ராயுதத்தையுடைய திருமாலும், திரிபுரங்களை அழித்த சிவபிரானும் வந்து துணையாக நின்று காத்தாலும், யார் தருமத்தோடல்லாமல் அதருமத்தோடு பொருந்தி நின்றார்களோ, அவர்களையெல்லாம் வேருடன் அழிப்பேன், நீங்கள் அஞ்சாதீர்கள்—என்றான்]

இதற்குவந்த முனிவர்கள், மறைகளைப்பாடித் திரித்த கோலினர்களாய் நிருத்தமாடி,

தோன்ற னீமுனி யிற்புவ னத்தொகை
மூன்று போல்வன முப்பது கோடிவந்
தேன்ற போது மெதிரல வென்றலிற்
சான்று வேதந் தவம்பெரு ஞானமே

[மேன்மகனே, நீ கோபித்தால், இம் மூன்று லோகங்களையும்போல் முப்பதுகோடி வந்து எதிர்த்தாலும் உனக்கு ஈடல்ல என்பதற்கு, வேதங்களும் தவமும் ஞானமும் சாட்சியாகும்]

என இராமனை இனிது புகழ்ந்து முகமன்கூறி, ஆண்டோர் பத்துத் தம்முடன் இருத்திக்கொண்டனர்.

இதன்பின் இங்குநின்றும் புறப்பட்டு அகத்தியரைச் சென்றடைய ஏகும் நெறியில் இராமன் மற்றிருவரோடும் இடையில் சுதீக்கணமுனிவர் உறையுளை நண்ணுதலும், அருள்பெருகிய சிந்தையராகிய அத்தவவரர் வந்தனைகள் ஆற்றி, தான் ஈட்டிய தவத்தையெல்லாம் தக்கிணையாகக்கொள்க என்ன அவ்விருந்து வந்த இராமனுக்கு நீட்டினன். தன் தவத்தின் பயனுகப்பெற்ற உலகங்களை முன் வான்மீகத்தில் அளித்ததற்கு மாருக இம்முனிவன் இங்குத் தான் செய்த தவத்தின் பிழம்பையே தந்த வேற்றுமை முன்னரே காட்டப்பெற்றிருக்கின்றது. கொள்ளெனக் கொடுத்தல் சிறந்ததாயினும் கொள்ளேன் என்று மறுத்தல் அதனினும் சான்றதாதலின் ஈரிடத்தும் இராகவன் ஏற்றுக்கொண்டானல்லன். எனினும், இவ்விரு கொடைகளின் தரத்தினை உருவிக் காட்டுமாபோல், அங்கு இராமன், "ஐயா, முனிவரே, நானே சுவயமாக அவ்வுலகங்களை எனக்குத் தேடிக்கொள்கின்றேன்' எனக் கைவிதிர்த்தகற்றினவனுக, இங்கு, "இறைவ, நின்னருள் எத்தவத்திற் கெளிது அறைவது" என்றுவிநயமுடன் விளம்பலுற்றுன்.

இதன்பின் சுதீக்கணரிடம் விடைபெற்று அகத்தியரது ஆசிரமத்தை இராமன் அணுகுதலும்,

ஆண்டகைய ரவ்வயின டைந்தமை யறிந்தா
னீண்டுவகை வேலைதுணை யேழுலக மெய்த
மாண்டவர தன்சரண்வ ழங்கவெதிர் வந்தா
னீண்டதமி ழாலுலகை நேமியின ளந்தான்

[நீண்ட தமிழ்ப்பாஷையால் உலகத்தை எல்லாம் திருமாலைப்போல் தன்னுள்ளடங்க அளந்தவனுகிய அவ் வகத்திய முனிவன், புருஷசிரேஷ்டர்களாகிய இராம லக்மணர்கள் அங்கு வந்ததை அறிந்து, மூண்டெழும் உவகைக்கடல் பதினன்கு உலகங்களையும் அடையும்படி எழுந்து, மாட்சிமைப்பட்ட வரங்களைக் கொடுத்தருள்பவனுகிய இராமபிரானைச் சரணமடைய எதிர்வந்தான்]

தான் பயிலும் தமிழ்தந்த பெரியோனென அக்குறுமுனியின்பால் கம்பருக்கு ஊக்கம் மிகுகின்றது. குறளாகி உலகெலா மளந்தவர் இருவர். இவர்களில் தமிழால் உலகை அளந்தவர்க்கே, தன்னெரு தாளால் அளந்தவர்தம் மெய்ப்பெருமை தெரியவரும் என்னுமாப்போல் அகத்தியனும் இராமனை எதிர்கொள வந்தனன். வந்த அம்முனிவரைக் கம்பர்பெருமான் புகழ்ந்துரைக்கும் பாசுரங்கள் அழகு மிகத்தவழும் அருமை வாய்ந்தன:—

பண்டவுணர் மூழ்கினர் படார்களென வானோ
ரெண்டவ வெமக்கருள் கெனக்குறை யிரந்தார்
கண்டொருகை வாரினன் முகந்துகட லெல்லா
முண்டவர்கள் பின்னுமிழ்க வென்றலு முமிழ்ந்தான்

[அசுரர் கடலில் மறைந்தனர், ஆதலால் அழியமாட்டார் என்று முன்னெரு காலத்தில் தேவர்கள், "மதிக்கப்படுகின்ற தவமூடையவனே, எங்களுக்கு அருள்செய்க" என்று குறையைச் சொல்லி வேண்டிக்கொள்ள, அவர்களைக் கண்டு இரங்கி, ஒரு கையில் வாரிஎடுத்து அக் கடல்நீரை யெல்லாம் குடித்து, பின்பு அத்தேவர்கள் 'உமிழ்ந்தருள்' என்ற வளவில் உமிழ்ந்தவன் இவ் வகத்தியமுனிவன்]

தூயகட லீரடிசி லுண்டது துரந்தா
னுயவத லாலமரு மெய்யுடைய வன்னன்
மாயவினை வாளவுணன் மாயவவன் வன்மைக்
காயமினி துண்டுலகி னரிடர்க ளைந்தான்

[குறுகிய உடலை உடைய அம்முனிவன், பரிசுத்தமான கடல்நீரை உணவாக உண்டு அதனை உமிழ்ந்தவன் ஆவது அன்றியும் மாய வினைகள் செய்கின்ற கொடிய வாதாபி என்னும் அசுரன் அழியும்படி அவனது வலிய உடலை இனிமையாகப் புசித்து உலகத்தின் துன்பத்தைப் போக்கினன்.]

கடல்நீரைப்போல் உண்டு உமிழவும் வல்லான்; அல்லது வாதாபியைப்போல் வேண்டுமெனின் இவ் வகத்தியன் உண்டபின் உமிழாதிருக்கவும் வல்லான்.

யோகமுறு பேருயிர்க டாமலைவு ருமலேகுநெறி யாதென மிதித்தடியி னேறி
மேகநெடு மாலைதவழ் விந்தையெனும் விண்டோய்
நாகமது நாகமுற நாகமென நின்றான்

[யோகங்கள் பயில்கின்ற பெரியவர்கள் வருந்தாமல் ஏகுவதற்கு வழி யாது எனத் திகைக்குமளவில், மேகவரிசைகள் தவழ்கின்ற விந்தியமெனும் ஆகாயத்தை அளாவிய மலையானது பாதாளத்தில் அழுந்தும்படி தன் கால்களால் மிதித்து ஏறி யானைபோல் நின்றவன்]

மூசரவு சூடுமுத லோனுரையின் மூவா
மாசிறவ வேகெனவ டாதுதிசை மேனு
னீசமுற வானினெடு மாமலய நேரா
வீசநிக ராயுலகு சீர்பெற விருந்தான்

[முன்னெருகாலத்தில் வடதிசை அழுந்தவும், அடர்ந்த பாம்புகளை அணிந்திருக்கின்ற சிவபிரான், "குற்றமின்றி வளர்க்கின்ற தவமுடையவனே, நீ தென்திசை செல்" என்றுஏவ, அவ்வார்த்தையின்படி, ஆகாயத்தளவு உயர்ந்த பெரிய பொதியமலையை அடைந்து, பரமசிவனுக்கு ஒப்பாக, உலகம் சமநிலையடையும்படி இருந்தவன்]

உழக்குமறை நாலினுமு யர்ந்துலக மோதும்
வழக்கினு மதிக்கவியி னும்மரபி னுடி
நிழற்பொலி கணிச்சிமணி நெற்றியுமிழ் செங்கட்
டழற்புரை சடர்க்கடவு டந்ததமிழ் தந்தான்

[ஒளி விளங்குகின்ற மழுவையும், அழகிய நெற்றியில் நெருப்பு உமிழ்கின்ற சிவந்த கண்ணையும் உடைய தழல் போன்றசோதியுடைய கடவுளாகிய சிவபிரான், கற்பித்த தமிழினை, வருந்திப் பயில்கின்ற நான்கு வேதங்களினும், உயர்ந்த மேலோர் கூறும் வழக்கைக் கொண்டும், செய்யுள்களைக் கொண்டும் தனது அறிவினுல் முறைப்படி ஆராய்ந்து அளித்தவன்]

இன்னதோர் தன்மையனை முனிவரன்,

விண்ணினி னிலத்தினில் விகற்பவுல கிற்பே
ரெண்ணினி லிருக்கினி லிருக்குமென யாரு
முண்ணினை கருத்தினை யுறப்பெறுவெ னுலென்
கண்ணினி லெனக்கொடு களிப்புறு மனத்தான்

[ஆகாயத்திலும் பூமியிலும் பலவகைப்பட்ட உலகங்களிலும் பெரிய எண்ணங்களிலும் வேதங்களிலும் இருக்கின்ற ஒன்று என்று யாவரும் தம் உள்ளத்திலே நினைக்கின்ற கருத்தாகிய பரம்பொருளை என் கண்ணால் இன்று காணப்பெறுவேன் என்ற விருப்பமுடன் களிப்புமிகுந்த மனத்தவன் ஆயினன்.]

பேரெண்ணினில் இருப்பவன் பரம்பொருள், என்பதற்கு நாமிங்குப் பெரிய எண்ணங்களில் கடவுள் இருக்கின்றார். (God is in great thoughts) எனப் பொருள் கண்டோமாயினும், சென்ற ஆண்டு 37-வது இதழ்த் தலையங்கத்தில், கடவுளின் உண்மையைப்பற்றிப் பேசும் செவ்வியில்,

"விண்டவர் கண்டிலர் கண்டவர் விண்டிலர், என்னுமிவ்வழக்குக் கடவுள்திறத்தில் நிரந்தரமான செய்தியாவது சரதம். ஆதலின் அவனுடைய உண்மையை யாமிங்கு விண்டுரைக்கப் புகுந்திலம். ஆயினும் அக்கடவுள் இருக்க இயலாது என்னும் எதிர்மறைச் சொல்லைச் சிறிது ஆராய்ச்சியால் வறியதாக்கிக் காட்ட இயலும். இல்லையேபோல் இருந்து நம்மனத்தால் எட்டமாட்டாத் தனிநிலையே அக்கடவுளின் பெருமைக்கு உரியதோர் அகச்சான்ருகும். கணிதநூலால் குறிக்கவல்ல பேரெண் எதுவென்று கேட்கின்ருர் ஓர் வித்தகர். எவ்விடை உரைப்போம். பதினுலாயிரங் கோடியேகோடி என்ருலும் அதன்மேலும் ஓரெண் இருக்கக்கூடுமென்றே! அப்படியே எண்ணி எண்ணிப் பார்க்குமளவில் அத்துணைக் கத்துணை அதிகமாய ஓர் எண் இருக்கக்கூடும் என்பது உண்மையோயாக இருக்கும்—அப்பேரெண் யாதென்று இயம்புவதோ எந்நாளுமில்லை"

என இயம்பிலெப்னீஸ், டேகார்ட் முதலிய மேனுட்டு வித்தகர்களது அரிய கருத்துக்களை யுட்கொண்டு தொடர்கின்ற வாக்கியங்களைக் கருதுங்கால், கம்பர் பிரானும் கணிதத்தின் பேரெண்ணில் பரம்பொருளை வைத்தாரோ என்று சிந்திக்கவும் இடமுளது.

## கலாநிலயம் 1930-வது வருடம் 3-வது வால்யூம்.

தலையங்கங்கள்:—அறியாமை வேண்டப்படும் 4. சுயநலச்சோதனை 8. விஷபத்திற்கேற்ற விளம்பரம். முயலுக்கு முயலவேண்டா. விளம்பினுல் வெட்கக்கேடு. கல்லாதபேர்களே நல்லவர்கள் 3. நாணத்தால் நைவார்திறம். வாலின் நீளம். பெருமையின் பெருமை...முதலிய கட்டுரைகள் ஐம்பது, உலகியலோடு வாழ்க்கையின் தத்துவத்தை விளக்குவன.

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B. A B. L.) அயோத்தியா காண்டம் முதலிரண்டு படலங்களின் விளக்க ஆராய்ச்சி அரசியலுக்குரிய அறங்களில் திருவள்ளுவர் வேதவியாசர் முதலானோர்க்கும் கம்பருக்கும் உள்ள வேறுபாடு 25-கட்டுரைகளில் விளக்கப்பட்டுளது. ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் வரைந்துள, "தசரதன் குறையும் கைகேசி நிறையும்" என்னும் நூலிற்கூறிய பொருளும் முடிவும் கம்பருடைய கருத்திற் கொவ்வாதன வென்று 25-கட்டுரைகளில் வாதிக்கப்பட்டிருக்கின்றது.

குறுந்தொகை:—(K. இராமரத்நம் ஐயர், B. A) புத்தகமாய் இப்பொழுது கிடைக்காத இச் சங்கநூற் செய்யுள் நானூறும் விளக்கமான உரையுடன் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது.

அப்பர்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் அறுபத்துநான்கு கலைகளை யறிந்து கையாண்ட பெருமை விளக்கப்பெற்றிருக்கின்றது.

இலஞ்சிப்பாவை:—(T. S. நடராஜபிள்ளை, B. A. B. L.) Sir Walter Scott என்பவர் ஆங்கிலத்தில் பாடிய Lady of the Lake என்னும் காவியத்தைத் தழுவி எழுதிய கதை.

மானத சாத்திரம்:—(T. P. மீனாக்ஷிசுந்தரம் M. A., B. L.) ஆங்கிலமுறையைத் தழுவி, நடத்தை, உணவுநாட்டம், அழுகை, சிரிப்பு, தன்னெடுப்பு, தன்னொடுக்கம், புணர்ச்சி, இணைவிழைச்சி, விளையாட்டு முதலியவைகளின் தத்துவங்கள் விளக்கப்பட்டுள்ளன.

தமிழ்ப் பாடம்:—வில்லிபாரதம் கிருஷ்ணன் தூதுச் சருக்கமும், அஷ்டப்பிரபந்தமும் போதிப்பதுடன், புணரிலக்கணம் முழுவதும் தெற்றென விளக்கப்பெற்றிருக்கின்றது.

நம்மாழ்வார் வைபவம்:—(K. இராஜகோபாலா சாரியார், B. A. B. L.) விளக்கமான ஆராய்ச்சியுடன், 2-ம்பத்து 6-ம் தசகம் வரையிலும்.

இவைகளைத் தவிர, ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்த கட்டுரைகளும், ஆச்சரிய சூடாமணி என்னும் வடமொழி நாடக மொழிபெயர்ப்பும், சிலப்பதிகாரக் கானல்வரியை அழகுற விளக்கிய 'மாதவி மாதவம்' என்னும் கட்டுரைகளும், தனிப்பாடல்களும், அண்டபுராண ஹாஸ்யப் பாடல்களும், நாயன்மார் சரித்திர உண்மைபோன்றபல கட்டுரைகளும் நிறைந்துள.

### 1931-வது வருடம் 4-வது வால்யூம்.

தலையங்கம்:—அகமே புறம், வாழ்வாங்கு வாழ்பவர் 10. உண்மையில் உழல்வார் திறம் 5 மெய்ம்மையை அலமரச் செய்யலாமோ 4. அருமையினு மருமை 4. மறப்பது முறுதியாமே. நள்ளாள் நகை 4. முதலிய கட்டுரைகள் 50.

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B A. B. L.) கைகேசி சூழ்வினைப் படலம் முதல் அயோத்தியாகாண்டம் இறுதியாக 50 கட்டுரைகளில் ஆராயப்பெற்றிருக்கின்றது.

சூளாமணி:—(K. இராமரத்நம் ஐயர், B. A.) இதுகாறும் உரை யெழுதப்பெறாத இந்நூல், உரையுடன் பதிப்பிக்க ஆரம்பமாகி இவ்வாண்டில் ஐந்நூறு செய்யுள்கள் வந்துள.

யாப்பிலக்கணம்:—உறுப்பியலும், செய்யுளியலில் பாக்களின் இலக்கணமும்.

அப்பர்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L) அப்பர் 64 கலைகளைக் கையாண்ட பெருமை விரிவாக வரையப்பட்டிருக்கின்றது.

ஆண்டாள்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) ஆண்டாள் பிறப்பு, இளமை, கல்வித்திறம், அனுபவம், யௌவனம், மதம், சித்தாந்தம், முத்தி முதலியவைகளின் உண்மை

மானத சாத்திரம்:—(T. P. மீனாக்ஷிசுந்தரம், M. A. B. L.) புலன்களின் அமைப்பும், உணர்வு முதலியவைகளின் தத்துவமும் விளக்கப்பெற்றுள.

பிஹாரோ நாடகம்:—ஆங்கிலப்புலவர் R. B. Sheridan எழுதிய நாடகமொழிபெயர்ப்பு.

நவராத்திரி நாடகம்:—(K. N. சுந்தரேசன், B. A. Hons) ஓர் நவீன நாடகம்.

சிதம்பரதேவர் சரிதம்:—(Dr. V. S. அருணாசலம் பிள்ளை) முத்தியில் மனம் வைத்து உலகத்தில் விவசரிப்பார் பெருமையை உட்கொண்ட வோர் காவல்.

களவியற் காரிகை:—(S வையாபுரிப்பிள்ளை, B. A. B. L.) இதுகாறும் அச்சேறாத நூல். அகப்பொரு ளிலக்கணத்தின் சிறப்பை விளக்கவல்லது.

கந்தபுராணமும் சங்க நூல்களும்:—(பண்டிதர், திம்மப்பா ஐடர்) கந்தபுராணத்தைச் சங்கநூல்களோடு ஒப்புநோக்கி ஆராயும் கட்டுரைகள்.

இவை தவிர, மொழிபெயர்ப்புக் கட்டுறைகள், தமிழிரட்டையர், முதலிய கட்டுரைகள் பல.

ஒவ்வொரு வால்யூமிற்கும் விலை வருமாறு:— பைண்ட் செய்யாதது ரூ. 7 8 0
காலிகோ கில்ட் பைண்ட் ரூ. 8 8 0 ஆப்லெதர் கில்ட் பைண்ட் ரூ. 9 0 0

இவ்விலையில் தபால் அல்லது இரயில் சார்ஜ் அடங்கவில்லை. இந்தியாவில் உள்ளவர்கள் இரயில்வே பார்ஸல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். To Pay போட்டு அனுப்புவோம். எழெட்டெணுக்களுக்கு மேல் இரயில்வே கட்டணம் ஆகாது. பர்மா, ஸிலோன் இவ்விரண்டு இடங்களுக்கும் ரயிலில் அனுப்பமுடியாதாகையால் விலையுடன் தபால் பார்ஸல் சார்ஜ் ரூ. 2—4—0 சேர்த்தனுப்பவேண்டும். மலேயே, தென்னுப்பிரிக்கா முதலிய நாடுகளில் இருப்பவர் தபால் சார்ஜிக்கு ரூ 3. சேர்த்தனுப்பவேண்டும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயலாது. முன்பணம் அனுப்பி எழுதல் வேண்டும்.

# வர்த்தமானம்

கானுடுகாத்தான் செல்வர் ராவ்பகதூர் S. Rm. C. T. சபாரத்னம் செட்டியார் அவர்கள், ஆதித் திராவிட மாணவர்களுக்குச் சாப்பாடு போடுவதற்காக லால்குடி தாலுக்கா போர்டிற்கு 10 ஆயிரம் ரூபாய் அளித்துள்ளார் என்று தெரியவருகின்றது.

***

உத்தமபாளயத்தில் நடந்து வரும் பாரதி என்னும் மாதப் பத்திரிகையின் ஆசிரியர் ஸ்ரீமான் R. நாராயண ஸ்வாமி அவர்கள் அவசரச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பெற்று 1 வருஷ சிறைவாசத் தண்டனையும் 200 ரூபாய் அபராதமும் விதிக்கப்பெற்றூர் என்று தெரிகின்றது.

***

லண்டனிலுள்ள பெரிய பாலமான வாட்டர்லூ பாலத்தைப் புதிப்பித்து ஆறு சாலைகள் போடக்கூடிய படி அகலமுடையதாகச் செய்வதற்கு லண்டன் நகர சபையார் 12 லட்சத்து 95 ஆயிரம் பவுன் செலவு செய்ய நிச்சயித்திருக்கின்றனர் என்றும், பாலவேலை நிபுணரான ஸர். கில்பர்ட் ஸ்காட் என்பார் எஞ்சினியராய் நியமனம் பெற்றிருக்கின்றூர் என்றும் அயல்நாட்டுச் செய்தி கூறுகின்றது

***

பவநகர் சமஸ்தானத்தார் ஏழை விவசாயிகளின் நன்மைக்காகச் சமஸ்தானத்தின் பற்பல விடங்களில் கிணறு வெட்டவும் பழைய கிணறுகளைப் பழுதுபார்க்கவும் ஒருலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கின்றூர்களாம். அச்சமஸ்தான விவசாய இலாக்கா அதிகாரிகள் இது வரை 80 கிராமங்களில் 250 கிணறுகளை வெட்டியிருக்கின்றனராம்.

***

பீட்டர் பாண்டியன்:—சமீபத்தில் மேன்மை தங்கிய சென்னை கவர்னர் மதுரை சென்றிருந்தபொழுது அவர் ஸ்ரீமான் T. C. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் அவர்களுடன் மதுரை மீனுக்ஷியம்மன் கோயிலைப் பார்வையிட்டார். கவர்னர் அவர்கள் அக்கோயில் ஆபரணச் சாலையைப் பார்வையிடும்போது, குதிரைச் சேணப் பாதவளையம் ஒன்று அவர் பார்வையைக் கவர்ந்தது. அதை எடுத்துப் பார்த்தார். அந்தப் பாதவளையம் எப்பொழுது யாரால் செய்யப்பட்டது என்பது பற்றியும் அது செய்யப்பட நேர்ந்ததற்குக் காரணமாயிருந்த சரித்திரத்தையும ஸ்ரீமான் டி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் பின்வருமாறு கூறினர்:—

“இன்றைக்கு 100 ஆண்டுகளுக்கு அதாவது 1812-வருஷம் முதல் 1828 வரை மதுரையில் ரவுஸ் பீட்டர் என்னும் ஐரோப்பியர் கலக்டரா யிருந்தார். அவர் வேலைபார்த்துக்கொண்டிருக்கையில் ஓரிரவு கனவில் மீனுக்ஷியம்மன் தோன்றி, ‘வீட்டை விட்டு வெளியிற் செல். இல்லையேல் ஆபத்து நேரும்’ என்று சொல்லியருளப் பீட்டர்துரை அவர்கள் உடனே கண்விழித்து வெளியிலே ஓடினர். சிறிது நேரத்திற்கெல்லாம் வீடு இடிந்து விழுந்தது. மீனுக்ஷியம்மனே தன்னைக் காப்பாற்றியதாக அவர் நினைத்து அவர் இப்பாதவளையத்தைச் செய்து அளித்தார். அவர் மதுரைக்கு அருகிலிருக்கும் அழகர்கோயிலிற்கும் பல கொடைகளை அளித்துள்ளார்.

மதுரைக்கு அவர் புரிந்துள நன்மை பெரிது. ஜனங்கள் அவரைப் பீட்டர் பாண்டியன் என்று கொண்டாடுவார்கள். அவர் தமது சொந்தப் பணம் கஜானுப் பணம் என்றும் பாராது தர்ம காரியங்களைப்புரிந்து வந்ததினுல் மதுரை கஜானுவில் 7 லட்சம் ரூபாய் குறைவு ஏற்பட்டது. அவர் மதுரையிலே இறந்தார். அவர் இறந்தபிறகு ஒரு கடிதம் அகப்பட்டது. அதில அவர் தாம் நியாயமான வழியிலே பணத்தைச் செலவு செய்துள்ளதாகவும், வீண்செலவு ஒன்றும் செய்யவில்லை என்றும் எழுதியிருந்தார். தனது சொந்த சொத்தான ஒரு லட்சத்தை நஷ்டத்திற்காக ஈடு செய்தும் இருந்தார். அவரைப்பற்றிய பாட்டுகளும் பல மதுரை வாசிகளால் இன்னும் பாடக் கேட்கலாம்”

இச்சரித்திரத்தைக் கேட்டுக் கவர்னர் அவர்கள் மகிழ்ச்சியுற்றூர் என்று மதுரைச் செய்தி கூறுகின்றது.

***

தென்னுப்பிரிக்காவிலிருந்து பலவகைப்பட்ட 400 விதமான தவளைகள் ஒரு பெட்டியில் லண்டனுக்கு அனுப்பப் பெற்றனவென்றும், அவை அங்கு ஆராய்ச்சி செய்யப்படுமென்றும், லண்டன் செய்தி கூறுகின்றது.


ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

கவனிக்க “சத்வைத்யசாலை” நஞ்சன்கூடு ஏமாறாதீர்




புனைட்டெட் ஸோல் ஏஜண்டு: குன்ஸரான், மதுரை.

குழந்தைகளுக்கு:

ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோஜனை மாத்திரை
சித்ர தைலம்,

“பால சுதா” (Reg.)

அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்

டானிக்குகள்:

சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்

ஜீவஸுதா (Reg.)

பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து 15 நாட்களுக்கு ரூ. 2-0-0.

டிப்போ: பம்பாய். கல்கத்தா.

நஞ்சன்கூடுபல்பொடி

சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) கோரோஜனை மாத்திரை

பிராஞ்சு: மதுரை. காஞ்சீபுரம்

KALANILAYAM
REG. NO. M, 2324.

—:வைத்திய ரத்ன :—

பண்டிட். D.கோபாலாசார்லு அவர்களின்

ESTD 1898

"ஜீவாமிருதம்"




பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, மறதி, அயர்வு, வீர்யக்குறைவு, இவைகளைப்போக்கி, தேக பலம், ஞாபகசக்தி, வீர்யவிர்த்தி, இவைகளை அளிப்பதில் இணையற்றது.

எல்லா இடங்களிலும் கிடைக்கும். விலை ரூ 3-4-0

ஆயுர்வேதாஸ்ரமம்

தபாற் பெட்டி. 287. மதருஸ்.

கேட்லாக் இனும்

## அகராதிகள்.

தமிழ்ச்சொல் அகராதி (3 பாகம்) ரூ 18—0—0

காரநேஷன் அகராதி (தமிழ்-தமிழ்-ஆங்கிலம்) 10—0—0

தமிழ்-தமிழ்-ஆங்கிலம் வி. விச்வநாத பிள்ளை இயற்றியது 676 பக்கங்கள் கொண்டது. ஒவ்வொரு சொல்லுக்கும் நேரான தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்பும் கொண்டது. 6—0—0

கலா நிலயம்,
புரசைவாக்கம், சென்னை.

## 1930-வது வால்யூம்

பயிண்டு செய்தும் செய்யாமலும் கிடைக்கும். சில பிரதிகளே இருக்கின்றன. வேண்டுவோர் சீக்கிரத்தில் பெறல் நலம்.

குறுந்தொகை என்னும் சிறந்த சங்கநூல் உரையுடனும், விசேடக் குறிப்புகளுடனும் இவ்விதழ்களில் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றன.

| விலை உள்நாடு | | விலை வெளிநாடு |
|---|---|---|
| ,, 9-0-0 | அரைலெதர் பயிண்டு | ,, 10-8-0 |
| ,, 8-8-0 | காலிகோ | ,, 10-0-0 |
| ,, 7-8-0 | (பயிண்டு செய்யாதது) | 9-0-0 |

ரயிலில் அனுப்பப்புத்தகமொன்றிற்கு 6 அணா ஆகும் தபாலில் அனுப்பவேண்டுமானல் உள்நாடுகளுக்கு ரூ. 2, வெளிநாடுகளுக்கு ரூ. 3 விலையுடன் சேர்த்து அனுப்பவேண்டும்.

கலா நிலயம்,
புரசை, சென்னை.

வித்வான் த. சண்முகக் கவிராயரின்

:: மகா பாரதம் தமிழ் வசனம் ::

திருத்தமான உயர்ந்த பதிப்பு

இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்குஅச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

(1) ஆதிபர்வம் ரூ. 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வங் அடங்கியது ரூ. 5. மற்ற பர்வம் அச்சில்.

பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையார்ப்பேட்டை, வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்

ஏற்படுத்தியது] நாஷனல் [1906

இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷூரன்ஸ் பில்டிங்ஸ், 7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

1906-ம் வருஷத்தில் ஏற்படுத்தப்பட்டது.

ஸ்டாக்குகளிலும், பாண்டுகளிலும் அவ்வப்பொழுது ஏற்படும் மாறுதல்களில்லாது லைப் இன்ஷூரன்ஸ் நிரந்தர சேமிப்பாக விருக்கின்றது.

பிள்ளையின் கல்விச் சேமிப்பு வயோதிகச் சேமிப்பு பெண்ணின் வரதக்ஷிணை குடும்பச் சேமிப்பு இவற்றிற்கு இன்ஷியூர் செய்யுங்கள்.

குறைந்த விகிதப் பிரிமியங்கள்—தாராள நிபந்தனைகளை இந்தியரால் மட்டும் நிர்வகிக்கப்பட்டுவரும் வலிமை பெற்ற கம்பெனி

மொத்த ஜவேஜி ... ரூ. 1,72,00,060-க்குமேல்
செலுத்தப்பட்டுள்ள உரிமைகளின் மொத்தம் ,, 86,00,00

திருப்திகரமான வீதப்படி போனஸ் வெளியிடப்படுகின்றது.

ஏஜன்ஸி நிபந்தனைகளுக் கெழுதுவது உங்களுக்கு லாபகரமானது.

T. அனந்தாச்சாரி, B. A. பிராஞ்சு காரியதரிசி, 113, அரமனைக்காரத்தெரு, ஜார்ஜ டவுன், மதராஸ்.
R G. தாஸ் & கம்பெனி, மானேஜர்கள்

நெருப்பு, இதர விபத்துகள் சம்பந்தமானவற்றை நாஷனல் நெருப்பு & ஜெனரல் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்டார் கவனித்து வருகின்றனர்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷூரன்ஸ் பில்டிங்., 7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

டி. அனந்தாச்சாரி, பி. ஏ, பிராஞ்சு காரியதரசி, 113, அரமனைக்காரததெரு, ஜார்ஜ் டவுன், மதராஸ்
ஆர். ஜி. தாஸ் & கம்பெனி, மானேஜர்கள்.

— திருக்குறள் —

மூலமும் சொற்குறிப் பகராதியும் விஷய ஒப்புக்குறளும்

(வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கபபட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச சேர்ததுப் பதிப்பாசிரியர் அளித்துளது மாணக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

விலை அணா 12. வி. பி. செலவு வேறு.

கலாநிலயம், புரசை, சென்னை.

அலங்காரம்—அழகு—ஸ்நானம் இவைகளுக்கு எங்கள்

:: மணித் தைலம் ::

மிகச் சிறந்தது. ஆயுர்வேத முறைப்படி தயார்செய்யப் பட்டது. 50 வருஷங்களாகப் புகழுடன் உலாவிவருகிறது. தலைமயிரை உதிராமற் தடுத்து நீளமாக வளரச் செய்யும். முகத்திலுண்டாகும் வடுக்களையும் பருக்களையும் நீக்கும். உஷ்ணத்தைச் சமனஞ்செய்யும்.

5 துலாம் தைலம் கொண்ட புட்டி 1-க்கு ரூ. 1
5 புட்டிகள் விலை ரூ. 4

ஆரோக்கிய கிரந்தம் இனும்!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)